
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 அக்டோபர் - 2000 இதழ் - 10



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன்; நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம் 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம் - 638 701. இந்தியா*

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


1. ஆசிரியர் உரை — 01
2. ஒருவர் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா? — 09
3. பெண்கள் பகுதி — 11
4. யோசுவா ஒரு கண்ணோட்டம் — 14
5. வாலிபர் பகுதி — 15
6. கருத்தரங்கம் பற்றி.... — 16
7. வெளிப்படுத்தின விசேஷம் — 20
8. தெரிந்து கொள்ளுங்கள் — 25
9. இடறுதலுக்கான கல் — 31

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor** S. RAJANAYAGAM

**Honorary Editor** J.C. CHOATE

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 October- 2000 Issue - 10**


*ஆசிரியவுரை*

# பாவம் வஞ்சனையானது

"பாவம்" என்ற மூன்றெழுத்து வார்த்தை, இந்தப் பார் முழுவதையும் பாடாய்ப்படுத்திக் கொண்டுள்ளது. இதிலே சிக்கி சீரழியாத மனிதனும், இதன் வஞ்சனைக்குத் தப்பிய மனிதனும் ஒருவனும் இல்லை. ***"எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி"*** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. (ரோமர்3:23)

பாவம் என்ற இவ்வார்த்தைக்குப் பல பொருள் உண்டு. பழைய பிரமாணம் எழுதப்பட்ட மொழியாகிய எபிரேயத்திலும், புதிய பிரமாணத்தின் மொழியாகிய கிரேக்கத்திலும் இதற்கு ஒன்றுக்கும் மேலான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. **மீறுதல், அக்கிரமம், குறிதப்பல், வழிதவறுதல்** என்பவை அவைகளில் அடங்கும். பாவத்திற்கு கொடுக்கப்படும் எல்லா விளக்கங்களையும் கவனித்துப்பார்த்தால், ஒரு பொதுவான முடிவுக்கு நாம் வரமுடியும். அதாவது, பாவம் என்பது *"தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் ஒன்று"* என்று. அதிகமான சங்கீதங்களை வடித்துக் கொடுத்த தாவீது அரசனும், அதிக இடங்களில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட காரணமாக இருந்த பவுல் அப்போஸ்தலனும் இக்கருத்தை ஏகமனதாக ஆமோதிக்கின்றனர். (சங்.51:4, ரோமர் 8:7).

ஏவாள், ஆதாம் பாவத்தினாலே, பாவம் உலகத்திலே பிரவேசித்தது என்று நாம் பரிசுத்த எழுத்துக்களிலிருந்து கண்டாலும், இதன் ஆரம்பம் பற்றி நமக்கு சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆதாமும், ஏவாளும் பாவத்திலே விழுவதற்கு முன்பாகவே, அவர்களை வஞ்சிக்கக்கூடிய தன்மையுள்ளதாக சர்ப்பம் இருந்து உள்ளது. சர்ப்பத்திற்குள்ளாக இந்தப் பாவம் எப்பொழுது புகுந்தது என்று நமக்குச்

சொல்லப்படவில்லை. சரி, இதன் ஆரம்பம் பற்றி ஆராய்வதை விட, இதன் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது.

பாவத்திற்கு, மனிதனைப் பாழாக்கும் பயங்கரமான தன்மைகள் பல உண்டு. அவைகளில் கொடுமையானது, அதன் "*வஞ்சிக்கும் தன்மை*". பூமியிலே, மனிதனுக்கு உள்ளாக புகுந்த, முதல் பாவமே வஞ்சனையான முறையிலே தான் புகுந்தது. அந்த வஞ்சனையிலே *ருசி* கண்ட பாவம், இன்றளவும் அதே பாணியைக் கையாண்டு வருகிறது. அப்போஸ்தலன் பவுல் பாவத்தினால் தனக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்தை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

***"பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது"*** (ரோமர்7:11)என்று, தன்னுடைய பழைய வாழ்க்கைக் குறித்தும், தன்னுடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்தும், பிலிப்பியருக்கு பட்டியலிட்டுக் காட்டும் பவுல், தான் ***"... நியாயப் பிரமாணத்திற்குரிய, நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்"*** என்று பெருமையோடு சொல்கிறான். (பிலி.3:6) இப்படி, தேவனுக்காக, தேவ நீதிக்காக பக்தியோடும், வைராக்கியத்தோடும் வாழவிரும்பிய பவுலைப்போன்ற திடநம்பிக்கையுள்ளவர்களையே, பாவம், சமயம் பார்த்து வஞ்சித்து இருக்கிறது என்றால், அதன் வஞ்சிக்கும் தன்மை எவ்வளவு கொடிதானதாக இருக்கிறதென்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். வஞ்சித்தது மாத்திரமல்ல, ஆவிக்குரிய ரீதியில் அவனைக் கொன்றும் போட்டது.

வஞ்சித்தல் என்றால் ***"தந்திரமான முறையில் ஏமாற்றுதல்"*** ஆகும். தன்னால் முடியாததை, முடியும் என்றுசொல்லி மனிதனைப் பாவம் ஏமாற்றுகிறது. தனது உண்மைத்தன்மையை மறைத்து, போலியான ஒரு தோற்றத்தை அவன் விரும்பும் வகையில் அவனுக்குக் காட்டுகிறது. அது தெரியாத மானிடம் அதிலே மயங்கி விழுந்து தன்னை முற்றிலுமாக அழித்துக்கொள்கிறது

இப்பொழுது,பாவம் மனிதனை ஏமாற்றும் சில வழிகளைக் கண்டு, அதற்கு இரையாகாமல் நாம் நம்மைக் காத்துக்கொள்வோம்.

## I. பாவம், நாம் சொன்னபடி கேட்பதாகச் சொல்லி ஏமாற்றும்:

எந்த ஒரு பாவமும் முதலில் பார்ப்பதற்கு, *ஐயோ பாவம்* என்பது போலத்தான் தோன்றும். அதாவது, நாம் சொல்கிறபடியெல்லாம் அது கேட்பதுபோலவும், நாம் வேண்டாம், போதும் என்று சொல்லும்போது, நம்மைவிட்டு போய்விடுவது போலவும் நடந்துகொள்ளும். அப்பொழுது, நாம் செய்யும் எந்த ஒரு பாவமும் நம்முடைய முழுக்கட்டுப்பாட்டில் இருப்பதுபோலத் தெரியும். ஆனால், அந்த பாவத்தில் அல்லது பாவங்களில் நாம் தொடர்ந்து ஈடுபடும்பொழுது, பாவமானது தனது வஞ்சனையின் மூலம் நம்மை, நம்மையுமறியாமல் அடிமைப்படுத்தி, நமக்கு எஜமானாக மாறும்.

ஆம், பாவம் செய்ய ஆரம்பிக்கும்போது, நாம் விரும்பும்போது மாத்திரம

செய்து வந்த பாவங்கள், சிறிது காலமாகும்போது, தன்னுடைய விருப்பத்திற்கு நம்மை ஆட்டுவிக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது, பாவம் செய்து வந்த நாம் , ஒரு கட்டத்தில் பாவம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடி அலைய வேண்டி வரும். துவக்கத்தில், ஒன்றைப்பற்றிய நினைவு வரும்போது மாத்திரம், நாம் பாவம் செய்யும் நிலை இருந்திருக்கும். காலப்போக்கில் நம்முடைய நினைவுகளில் எல்லாம் அந்தப் பாவம் நிறைந்து,நம்மை நிலைகுலைய வைக்கும்.

ஒரு வேளை, பாவம் எந்த வகையானதாக இருந்தாலும், அவைகளைச் செய்கிற மனிதன் அதற்கு அடிமையாயிருக்கிறான் என்பது யதார்த்தமான உண்மை. இல்லை, இல்லை நான் விரும்பும்போது மாத்திரமே பாவம் செய்கிறேன் என்று ஒருவன் எவ்வளவுதான் அடித்துச்சொன்னாலும், அவன் அதற்கு அடிமைதான். ஏனெனில், பாவம் மற்றும் அதன் தன்மைப்பற்றியும், அவைகளை செய்யத் தீவிரித்துத் திரியும் மனிதன் பற்றியும் மிக நன்றாக அறிந்த இயேசு ஆண்டவரின் கூற்றைப் பாருங்கள். ***"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக : பாவம் செய்கிறவன் எவனும், பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."*** என்றார் (யோவான் 8:34). மெய்யாகவே, மெய்யாகவே என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எப்படிப் பொய்யாகமுடியும்?.

இதே கருத்தை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அப்போஸ்தன் பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, இன்னும் விளக்கமாகச் சொல்லியுள்ளார். ரோமர்.6:16-22 பகுதியை வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில், பாவத்திற்கோ அல்லது நீதிக்கோ அடிமையாய் இருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

அப்போஸ்தலன் பேதுருவும், இக்கூற்றை வலியுறுத்தும் கருத்தைத் தன் நிருபத்தில் சொல்லாமலிருக்கவில்லை. ***"தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே"*** (2பேதுரு 2:19). பாவம் செய்கின்ற ஒருவனின் நிலைபற்றி பரிசுத்த வேத எழுத்துக்கள் எவ்வளவு திட்டமும், தெளிவுமாகச் சொல்கிறதென்று பார்த்தீர்களா?

இந்த வசனங்களோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டு, நாம் நம்மைத் தற்பரிசோதனை செய்துபார்த்தால் உண்மை நிலையும் அதுதான் என்பதை சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒத்துக்கொள்வோம்.

ஆனால், நம்மில் குடிகொண்டு, நம்மை அடிமைப்படுத்தி, ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் பாவங்களை, நாம் ஆரம்ப நாட்களில் செய்யத் தொடங்கினபோது, என்ன மனநிலையோடு துவக்கினோம் என்பதை கொஞ்சம் நினைத்துப்பார்ப்போம். ஒருவேளை அது புகைப்பிடிக்கும் பழக்கமாக இருக்கட்டும், குடிப்பழக்கமாக இருக்கட்டும், விபச்சாரமாக இருக்கட்டும்,

சூதாட்டமாக இருக்கட்டும் இன்னும் திருட்டு, பொய், புரட்டு, ஏமாற்று, லஞ்சம், பித்தலாட்டம் என்று எதுவாக இருக்கட்டும், இவைகளைச் செய்ய நாம் ஆரம்பிக்கும் போது, என்னமனநிலையோடு ஆரம்பித்தோம்? சொல்லுங்கள். யோசியுங்கள். எல்லாமே, தீமை என்று தெரிந்தும், வாலிபத்தில் நமக்குக் கிடைத்த சில சேர்க்கைகளுக்காக, நாம் வேலைசெய்த இடங்களில் நிலவிய சூழ்நிலைக்காக, குடும்ப பாரத்திற்காக, ஒரு ஜாலிக்காக, மற்றவர்களின் நிர்பந்தங்களுக்காக, அவைகளினால் கிடைக்கும் உடனடி லாபங்களுக்காக, தற்காலிக இன்பங்களுக்காக, இன்னும் விளையாட்டுக்காகவும் கூட அவைகளைச் செய்ய ஆரம்பித்தோம். அப்படித்தானே, கொஞ்ச காலத்திற்கு இருக்கட்டும், பிறகு சூழ்நிலை மாறும்; பிறகு இவைகளையெல்லாம் ஒரு நாளில் ஒழித்துவிடலாம் என்றெல்லாம் மனப்பால் குடித்தோம் தானே.

இப்பொழுது நம்முடைய நிலைஎன்ன? அதை ஏன் கேட்கிறீர்கள் என்கிறீர்களா? இன்றைக்கு நம்மில் எத்தனை பேர், பாவங்களுக்கு அடிமைப்பட்டு, நம்முடைய வாழ்வை அழித்துக்கொண்டுள்ளோம்? விளையாட்டுக்காக ஆரம்பித்தவை இன்று விஸ்வரூபமெடுத்து ஆடிக்கொண்டிருக்கிறதே எப்படி?அவைகளுக்கு பயந்து நாம் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விடவும் முடியாமல், வெளியே தெரிந்தால் வெட்கம் என்று எண்ணி பயந்து, பயந்து நாம் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கவில்லையா? குடியால் எத்தனை குடும்பங்கள் நிர்க்கதியாய் வீதியிலே நிற்கிறது! புகையின் கொடுமையால் பல சரீரங்கள் கெட்டுப்போகவில்லையா? சூதாட்டத்தால் சொத்து சுகங்கள் நாசமாகவில்லையா? விபச்சாரத்தால் அநேகச் சரீரங்கள் உருக்குலைந்து ஆட்கொல்லி நோய்க்கு பயந்துகொண்டிருக்கவில்லையா?

சரி, இந்த நிலை எப்படி வந்தது? பாவம், நம்மை வஞ்சித்தது. பாவம் நம்மை ஏமாற்றியது. நாம் விரும்பும்போது நம்மைவிட்டு ஓடுகிறேன் என்று சொல்லி, நம்மை நம்ப வைத்து, அதனடிப்படையில், நம்மை செயலில் இறக்கி, இப்பொழுது இந்த நிலைக்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனை இப்பொழுதாகிலும் புரிகிறதா? உணர்வடையுங்கள்.

## II. பாவம் அழகான தோற்றத்தைக் காட்டி நம்மை ஏமாற்றும்

ஒருவேளை, அழகு இரசனைக்கு ஏற்றதாகயிருக்கலாம். ஆனால் நடைமுறையில் நன்மைக்கு ஏற்றதாக இல்லை. அழிவுக்கும், பெருந் தீமைகளுக்கும், வீழ்ச்சிக்கும் அது ஆதாரமாக இருந்தது என்று சரித்திரம் சாட்சிப் பகர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. அழகை, ஒரு அழிக்கும் ஆயுதமாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன் பிசாசு தான். இவ்வாயுதத்தை அவன் வெகு தந்திரமாகக் கையாண்டு, தேவ சாயலோடு சிருஷ்டிக்கப்பட்டு, நித்திய காலமாய் வாழும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதனை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப்பிரகாரமாகவும் மரிக்கும்படியாகச் செய்தான்.

ஆம் **அப்பாவியாக** இருந்த ஏவாள், அழகிலே மயங்கித்தான் **பாவியாகினாள்.** சர்ப்பம் சொன்ன விருட்சத்தைக் கண்ட போது, அவளுடைய பார்வைக்கு அது இன்பமாக இருந்திருக்கிறது என்று வசனம் சொல்லுகிறது.

"*அப்பொழுது ஸ்தீரியானவள், அந்தவிருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*" (ஆதி.3:6). வசனத்தின் கடைசிப்பகுதி அவள் *பறித்துப் புசித்தாள்* என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதின் கனியைப் பறித்துப் புசிக்க வேண்டும் என்ற ஆவலை, சர்ப்பம் மாத்திரம் தூண்டவில்லை. "*விருட்சத்தின் அழகும் சேர்ந்தே தூண்டியிருக்கிறது.*"

ஒருவேளை, அந்த மரம் பார்வைக்கு இன்பமாக இருந்திருக்காவிட்டால், ஏவாள் அதின்பக்கமே போயிருக்கமாட்டாள். கனியைப் பறிக்கவும், புசிக்கவும் நேராமல் போயிருக்கலாம். அப்பொழுது, அதைத் தன் கணவனுக்கும் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்பொழுது, தேவ கட்டளை மீறப்படாமல் இருந்திருக்கும். பாவம் உலகில் வந்திருக்காது. ஆணுக்கும், பெண்ணுக்கும், இந்தப் பூமிக்கும் கடுமையான சாபம் கிடைத்திருக்காது. மானிடம் இந்தப் பூமியில் அல்லல் படாத ஒரு வாழ்க்கைக்குப் பங்காளிகளாக மாறியிருக் கலாம். மனிதனுக்கான தேவதிட்டம், வித்தியாசமாகப் போயிருக்கலாம், யாருக்குத் தெரியும்?

ஆனால், எல்லாம் எதினால் வந்தது? அழகில் மயங்கினதால் வந்த வினை. இன்றைக்கும், மனிதனுக்கு சரீர உபாதைகளையும், ஆத்தும உபாதைகளையும் ஏற்படுத்தும் கடுந்தீமைகள் அழகிய தோற்றத்துடன் தான் சமுதாய சந்தையில் வலம் வருகிறது. உதாரணமாக, மது வகைகளை தகர டப்பாக்களில் அடைத்து வைத்து, பிளாஸ்டிக் டம்ளர்களில் ஊற்றிக்கொடுத்தால், மிகக் குறைவானவர்களே அதை விரும்புவர். குடிக்கும் பழக்கத்திற்கு ஆளாவோரும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பர். ஆனால் இன்று நிலைமை எப்படி? கண்ணை க் கவரும் மாடல்களிலான பாட்டில்களில் அடைக்கப்பட்டு, பளிச்சென்று வெளியில் தெரிகிற மாதிரியான கண்ணாடி கோப்பை மற்றும் கிண்ணங்களில் பரிமாறப்படுகிறது. அவைகளில் அது ததும்பும் போது, வேண்டாம் என்று நினைப்பவர்கள் உள்ளங்கள் கூடத் தடுமாறுகிறது. சரி, இன்று ஒரு நாள் இருக்கட்டும் என்று. பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. ஞானி சாலமோன் இந்த அவல நிலைக் குறித்து எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள்."*மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும்; விரியனைப்போல் தீண்டும், உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்,*

*உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்"* (நீதி.23:31-33).

மேற்சொல்லப்பட்ட தீமைகளுக்கு அடிப்படை என்னவென்று தெரிகிறதா? பாராதே என்று சொல்கிறான் ஞானி. ஆகவே அடிப்படை **பார்த்தல்.** பார்க்கும்பொழுது அதன் தோற்றம், அழகு இவை கவர்ந்திழுக்கிறது.

அடுத்து தாவீதின் வாழ்க்கையில் நடந்ததும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். சிறு வயதுதொடங்கி கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒரு வாழ்க்கையை அவன் நடத்தியிருந்தும், பாவம் இந்த தாவீதை,அழகு என்ற படுகுழியிலே குப்புறத்தள்ளியது. தான் ஆடுமேய்க்கும் இளைஞனாக இருந்தபொழுது, கர்ஜித்து வந்த கோலியாத்தைக் குறித்து இவ்விதமாய்க் கூறியுள்ளான். ***"ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்"*** (1.சாமு.17:26) என்றான். தன்னுடைய தேவனைப் பற்றி இவ்வளவு பெருமிதம் கொண்டிருந்த தாவீது, அழகிலே மயங்கி பத்துக் கட்டளைகளில் மூன்று கட்டளைகளை பகிரங்கமாக மீறினான்.

பத்சேபாளை உப்பரிகையின் மேலிருந்து பார்த்து, அவளது அழகிலே மயங்கினான். அவளை அடைவதற்காக அவன் செய்த சில்லறைத்தனங்கள் மிகக் கேவலமானது. ***"பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக," "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக", "கொலை செய்யாதிருப்பாயாக"*** என்ற மூன்று தேவ கட்டளைகளை கூசாமல் மீறினான். (2.சாமு.11அதி).

பாவம் மனிதனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது பார்த்தீர்களா? அழகின் பின்னால் போனால் மிஞ்சுவது அசிங்கமே. ஜாக்கிரதையாக இருந்து பாவத்தின் வஞ்சனையில் சிக்காமல் நம்மைக் காத்துக்கொள்வோம்.

## III. பாவம் விதைப்பதை அறுக்கத் தேவையில்லை என்று சொல்லி ஏமாற்றும்.

மனிதன், இன்று இவ்வளவு தீவிரமாகப் பாவத்தில், கொஞ்சம் கூட பயமில்லாமல் ஈடுபடுகிறான் என்றால், அதற்குக் காரணம், அவைகளுக்குத் தண்டனை இல்லையென்ற அவனது ஆழமான நினைப்புத்தான். தண்டனைக்குப் பயப்படும் பயம் மனிதனுக்கு இயல்பாகவே உண்டு. ஆனால், இந்த இயல்பை மீறி அவன் நடந்து கொள்கிறான் என்றால், அதற்குக் காரணம் அவன், ஏமாற்றப் படுகிறான் என்பதே. அவனுக்கு முன்பாக வீசப்படும் கண்ணியில் அவன் மதியில்லாமல் சிக்கிவிடுகிறான்.

அந்த வேலையை பாவம்; மிகத் தந்திரமாகச் செய்கிறது. அப்படியே, ஒருவேளை தண்டனைக் கிடைத்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடாகாது என்று சொல்லி நூதனமாக தன் காரியத்தைச் சாதிக்கிறது.

ஆனால், செய்த தவறுகளுக்கு தண்டனை உண்டு என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது பழைய ஏற்பாட்டின் நாட்களில், யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு, கானானில் எஞ்சியிருக்கிற சிலர் இராஜாக்களோடு போரிடவேண்டிய கட்டாயம் இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தருடைய அனுமதியோடு அந்த யுத்தங்களை வெற்றிகரமாக அவர்கள் நடத்தினர். ஒரு சமயம் அதோனிபேசேக் என்ற ராஜா தோல்வியுற்று இவர்களின் கைக்கு தப்பி ஓடிப்போகையில், அவனைப் பின் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களை தறித்துப்போட்டார்கள். (நியா.1:6) அந்த நிலையில் அதோனிபேசேக் ராஜா எப்படிப் புலம்பியுள்ளான் என்று கொஞ்சம் கவனியுங்கள் உண்மை விளங்கும்.

***"அப்பொழுது அதோனிபேசேக் ; எழுபது இராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கித்தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான்"*** (நியா.1:7).

நீதியுள்ள நம் தேவனிடமிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த உண்மை தெரியாமல் மனிதன் தேவனோடு விளையாடிக் கொண்டுள்ளான்.

புதிய ஏற்பாட்டிலும் இது இன்னும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. விசுவாசத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த கலாத்தியா பட்டணத்து மக்களுக்கு, பவுல் எச்சரிப்புக் கொடுத்து எழுதும் வசனத்தைப் பாருங்கள். ***"மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்."*** (கலா.6:7,8)


இதைவிடத் தெளிவாக, வேதம் வேறு எப்படிச் சொல்லமுடியும்? இவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பது கூட விளங்காமல் அவன் பாவத்திலே ஈடுபடுகிறான் என்றால், மனிதன் எவ்வளவு கொடுமையாக வஞ்சிக்கப்படுகிறான் என்று பாருங்கள். பாவம் எவ்வளவு நச்சுத்தன்மையுடையதாக உள்ளது எனக் கவனியுங்கள். இந்தப் பாவத்திடம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என சிந்தியுங்கள்.பாவம் நம்மை முட்டாளாக்க இனி ஒருபோதும் நாம் அனுமதிக்க வேண்டாம்.

நாம் ஒவ்வொருவரும், பாவம் என்னசொல்லுகிறதென்றும், எப்படித் தோற்றம் அளிக்கிறதென்றும் பாராமல், அதனுடைய உண்மைத் தன்மையையும்,

அதின் பயங்கரத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் காண்போம். பாவம் என்னதான் பித்தலாட்டம் செய்து நம்மை வஞ்சிக்கப் பார்த்தாலும், நாம் மயங்கிவிடாமல், பாவத்தை அதன் நிஜத்தன்மையோடு பார்த்து, நம்மை விட்டு விரட்டுவோம்.

பாவம் எவ்வளவு அசிங்கமானது என நாம் இப்பொழுது பார்த்துள்ள படியால், அதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள, மிகச் சிறந்த வழி ஒன்றுள்ளது. அதின்படி நாம் யாவரும் செய்வோம். ***"தேவனுக்குப் பயந்து , அவர் கற்பனைகளைக் கைக்கொள்வோம்."*** (பிரச.12:13). ஏனெனில், ***"அவருடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள்"*** . (சங்.119:172).

ஆகவே, நீதியுள்ள அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ, பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவாராக!



எ.ச.செ. ராஜநாயகம்

| **பழைய உடன்படிக்கை** | **புதிய உடன்படிக்கை** |
|---|---|
| 1. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது (யோவா.1:17) | 1. கிருபையும், சத்தியமும் கிறிஸ்துவின் மூலமாய் கொடுக்கப்பட்டது. (யோவா.1:17) |
| 2. மிருக இரத்தத்தால் பிரதிஷ்டைப்பண்ணப் பட்டது(எபி.9:18-22) | 2. கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரை யிடப்பட்டது (எபி.9:14-17) |
| 3. வரவிருக்கும் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு நிழலாயிருக்கிறது (எபி.10:1) | 3. தேவனுடைய பரலோக திட்டமாயிருந்தது. (எபி.8:4,5) |
| 4. மிருக பலி தொடர்ந்து செலுத்தப்பட்டது (எபி.10:1-4) | 4. கிறிஸ்துவின் இரத்தம் ஓரே தரம் எல்லோருக் காகவும் சிந்தப்பட்டது. (எபி.9:24-28) |
| 5. அக்கிரமங்களினிமித்தம் கூட்டப்பட்டது (கலா.3:19) | 5. ஆதியிலிருந்தே, விசுவாசமுள்ளவர்களை இரட்சிக்கும்படியான தேவ திட்டமாய் இருந்தது.(கலா.3:16) |
| 6. சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது (கொலோ.1:14) | 6. இந்தப் புதிய உடன்படிக்கைதான் பழையதை மாற்றியது. (எபி.8:13) |

# ஒருவர் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா?

ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்பதை வேதம் போதிக்கிறது.அதற்கு அநேகக் காரணங்கள் உண்டு. ஞானஸ்நானம் ஒருவரை இரட்சிக்கிறது. (1.பேதுரு 3:21) அது பாவமன்னிப்பைக் கொடுக்கிறது (அப்போஸ்தலர் 2:38) ஒருவரை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது. (ரோமர்.6:3,4), சபைக் குள்ளாகவும் செய்கிறது. (1.கொரி.12:13) அப்படியிருந்தும். இப்பொழுது அமுலில் இருப்பது ஒரே ஞானஸ்நானம் என்பதை வசனம் தெளிவாகப் போதிக்கிறது (எபேசி.4:5)ஆனால் இப்போதைய கேள்வி ஒருவர் ஏற்கனவே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தாலும் மறுபடியும் ஞான்ஸ்நானம் பெற வேண்டுமா? என்பது தான்.

ஒருவர் முறையாக வசனப்படி ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தால், மறுபடியும் எந்த சூழ்நிலையிலும் ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியமில்லை.முதலாவதாக அப்படிச் செய்வது இயலாத காரியம். வசனத்தின்படி ஒருவர் ஒரு முறை மட்டும் ஞானஸ்நானம் பெற இயலும். எனவே கேள்வி என்னவெனில் ஒருவன் வசனப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறாரா என்பதுதான். ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஜனங்கள் முறையாக ஞானஸ்நானம் பெறாதிருந்தும், தாங்கள் பெற்ற ஞானஸ்நானம் சரியானதே என எண்ணிக் கொண்டுள்ளனர். அவற்றில் சிலவற்றை நான் இங்கே வரிசைப்படுத்தட்டும்.

1. குழந்தையாக இருக்கையில் தெளிக்கப்பட்டோரெல்லாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோர் அல்ல. தெளித்தல், ஞானஸ்நானம் ஆகாது. வசன அடிப்படையற்ற மனித வழக்கமே தெளித்தல். ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணப் படுதலாக வேதம் கூறுகிறது. (கொலே.2:12;ரோமர் 6:3-4) அது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலைக் குறிக்கிறது. (அப்.8:26-39). அடுத்ததாக குழ்ந்தை ஞானஸ்நானத்தை வேதாகமம் எங்குமே போதிப்பதில்லை மாறாக, குழந்தைகள் பாவமற்றவர்கள் என்றே வேதம் போதிக்கிறது(மத்.18:1-3) இறுதியாக, கர்த்தருக்குக் கீழ்ப்படிய போதிய பிராயத்தை ஒருவர் அடைந்து, சத்தியத்தைக் கேட்டு (ரோமர்.10:17) தன் இருதயத்தில் விசுவாசித்து (யோவான் 3:16) தன் பாவங்களுக்காக மனந்திரும்பி (அப் 17:30) தன் வாயினால் இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (மத்.10:32) தன் பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெறவேண்டும். (அப்.2:38) எப்படிப் பார்த்தாலும் ஒருவர் குழந்தையிலே தெளிக்கப்பட்டிருந்து, முறையான ஞானஸ்நானத்தை பெறாமலிருந்தால், இயேசு கட்டளையிட்டபடி அவர் ஞானஸ்நானம் பெற வேண்டும்.(மாற்கு16:15,16).

2. பெரியோர்களாயிருந்தும்,தெளிக்கப்பட்டிருந்தால் அவர் வசனப்படி ஞானஸ்நானம் பெற்றவரல்ல. அவர் மறுபடியும், ஞானஸ்நானம் பெற்றாக

வேண்டும். ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம்பண்ணப்படுதல், ஆகையால் தெளித்தல் ஞானஸ்நானமாகாது என்பதை அறியவேண்டும். தெளித்தலை ஞானஸ்நானம் என நியாயப்படுத்த ஒரு வழியும் இல்லை. நீங்கள் ஒரு சொல் அகராதியைத் திருப்பினாலும், அதில் ஒருவேளை தெளித்தலும் ஊற்றுதலும் ஒரு ஞானஸ்நானம் என்று கூறப்பட்டிருந்தால் அது இன்று அறியாத மக்கள் மத்தியில் தான் பயன்படுத்தப்படும். இது பொதுவான ஒரு விளக்கம் என்பதை நீங்கள் உணரவேண்டும். அப்படிப்பட்ட விளக்கம் அளிப்பவர் வேதாகம விளக்கத்தை கொடுக்க முயலுவதில்லை. சகல அதிகாரமும் தனக்கே உரியது என்று இயேசுசொன்னார். (மத்.28:18-20) அவர் ஊற்றுதலையும், தெளித்தலையும் ஞானஸ்நானம் ஆக அங்கிகரிக்கவில்லை. ஆகையால் அவைகளை ஞானஸ்நானமாகக் கருதுவோர் கர்த்தரையல்ல, மனிதனையே பின்பற்ற முற்படுகின்றனர்.எனவே ஒருவர் தெளிக்கப்பட்டால் அவர் ஞானஸ்நானம் பெறவில்லை என்று பொருள். அது அவர் மறுபடியும் ஞானஸ்நானம் பெறுதலை வலியுறுத்தாமல், வசனரீதியாக ஞானஸ்நானம் பண்ணப்படுதலையே வலியுறுத்துகிறது.

3. தண்ணீரில் முழுகுதலாகிய அடக்கம் பண்ணப்படுதலை பெற்றும் ஒரு பிரிவுக் கூட்டத்தில் அங்கம் வகிப்போர் வசனப்படி ஞானஸ்நானம் பெற்றவரல்ல. ஒரே ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல்தான், ஆனாலும் அது மாத்திரமல்ல.அது சரியான நோக்கத்திறகு கொடுக்கப்படவேண்டும். அது பிதா, குமாரன்,பரிசுத்த ஆவியின் நாமத்திலே செய்யப்படவேண்டும் (மத்.28:19,20) வசனப்படி ஒருவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டால், அவர் மனித சபையில் அங்கமாக மாட்டார். மாறாக அவர் தனது பாவ மன்னிப்பிற்காக, தண்ணீரில் அடக்கம் பண்ணப்படும்போது கர்த்தருடைய சபையிலே அவர் சேர்த்துக்கொள்ளப் படுகிறார். இப்படியாக அவர் கிறிஸ்துவின் அதிகாரத்திற்குள் ஞானஸ்நானம் பெறுகிறார். ஒருவர் பிரிவுக் கூட்டத்தில் இருந்தால், அவர் தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தாலும் அவர் இன்னமும் ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியமாகிறது. அப்பொழுதுதான் அவர் ஒரே ஞானஸ்நானத்தின் அனுபவத்தை பெற்றவராவார்.

எனவே ஞானஸ்நானம் அதிமுக்கியமானதும், அது சரியான முறையில் நடப்பிக்கப்பட வேணடியதுமாகும். இல்லாவிடில் அது ஞானஸ்நானம் அல்ல, உண்மையில் ஞானஸ்நானம் பெறாத அநேகர் என்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றிருப்பதாக கூறவதுண்டு. ஆனால் தெளித்தல் ஞானஸ்நானமல்ல என்றும் உண்மை ஞானஸ்நானம் ஒருவரை நாமகரணக்கூட்டத்தில் அங்கமாக்காது என்றும் அவர்கள் உணரும்போது, வேத. வசனப்படி ஞானஸ்நானம் பெறும்படி தங்களை ஒப்புக்கொடுப்பதுண்டு. அதற்குப் பின்பே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றதாக கூறமுடியும். இதற்கு ஒப்பான செயலை அப்.19ம் அதிகாரத்தில் காண்கிறோம்.

நீங்கள் வசனப்படி ஞானஸ்நானம் பெற்றுள்ளீர்களா? இல்லாவிடில் இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு. (அப்.22.16)

**J.C. CHOATE** J.C. சோட்

# பெண்களின் பங்கு - சபையில்

பொதுவான இடங்களில் தலைமை ஏற்பதும், போதிப்பதும், வசனங்களை படித்து அதற்கு ஒப்புக் கொடுப்பதும், சபையானது நேர்மையற்ற வழியிலே சென்று விடாதபடி பாதுகாப்பதும் ஆண்களின் வேலையாகும். சபையின் அனைத்து காரியங்களும் பூர்த்தியாவதற்கு சபையில் உள்ள ஆண்களில் சிலர் சுவிசேஷகர்களாகவும், போதகர்களாகவும், மூப்பர்களாகவும், உதவிக்காரர் களாகவும் எழும்ப வேண்டும். எபிரேயர் 13:17-ல்"***உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல சந்தோஷத் தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜன மாயிருக்க மாட்டாதே***" என்று நாம் பார்க்கிறோம்.

இந்த வகையாக, நடத்துகிறவர்கள் சமுதாயத்தில் இறங்கி வேலைசெய்து, யாரெல்லாம் வசனத்தைப் படிக்க வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்களோ அவர்களைத் தேடிப்பார்த்து அவர்களுக்குப் போதிக்க வேண்டும். அவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கிற விஷயத்திலும், தர்ம காரியத்திலும் சபையை வழிநடத்திச் செல்பவர்களாக இருக்க வேண்டும். சபையானது தன்னுடைய அங்கத்தினர்களின் குடும்பங்களில் ஆவிக்குரிய தேவைகளை சந்திப்பதாகவும், அத்தோடு சுவிசேஷப்பணியை உலகத்தின் பல பாகங்களிலும் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதால், அவர்கள் சபைக்கடுத்த எல்லாக் காரியங்களிலும் வழி நடக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் ஆண்கள் ஆராதனை நேரங்களில் தலைமை ஏற்று நடத்தவும், போதிக்கவும், ஜெபிக்கவும், பாடல்களை பொறுப்பேற்று நடத்தவும் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர்.

பெண்கள் சபையில் என்ன செய்ய முடியும்? முதலாவதும் மிகவும் முக்கிய மானதுமான வேலை என்னவென்றால், கர்த்தருடைய நாளாகிய ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சபையின் மற்ற அங்கத்தினரோடு சேர்ந்து ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும். சில நேரங்களில் கணவன் மனைவி ஆகிய இருவரும் பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதனைக்கு போவதென்பது மிகவும் கடினமான காரியம். எனவே கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டால் போதும் என தீர்மானிப்பார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பரலோகத்திலிருந்து, பூமிக்கு வந்த தூரம் மிகவும் பெரிதாகவா இருந்தது? அல்லது சிலுவையில் மரித்தது அவருக்கு மிகவும் கஷ்டமாகவா இருந்தது?

நமக்காக அவர் ஏற்கனவே நிறைய காரியங்களை செய்து முடித்திருக்கும் போது நம்மிடத்தில் அவர் கேட்பது எப்படி அதிகமான காரியமாய் இருக்கமுடியும்? யாராவது அப்படி ஆராதனையில் கலந்து கொள்ளாமல், சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு அதை அற்பமாய் நினைத்து தேவனுக்கு விரோதமான சாக்கு சொல்வதென்பது அவர்களுக்கு வெட்கமான காரியமாகும். நாம் செய்ய முடியாத ஒன்றை தேவன் நம்மை செய்யக் சொல்லிக் கேட்பதில்லை. ஆகையால் கிறிஸ்தவ பெண்கள் ஒவ்வொரு சபை கூடிவருதலின் போதும் கட்டாயம் தங்கள் கணவனுடன் கலந்து கொள்ளவேண்டும். பிள்ளைகளையும் தங்களோடு அழைத்துச் செல்லவேண்டும். ஏனென்றால் அப்போதுதான் அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும், சோதனையான நேரத்திலும் தேவனை முதலாவதாக வைப்பார்கள் அப்படிச் செய்யும் போது மட்டும் தான், அவர் நம்மை முழுவதுமாக ஆசீர்வதிக்க முடியும்.

நல்ல, ஸ்திரமான ஆவிக்குரிய பெண்கள் இல்லையென்றால், எந்தவொரு சபையும், ஸ்திரமான சபையாக இருக்க முடியாது. எனவே, பெண்கள் வேத வசனங்களைப் படித்து, தியானிக்க தங்களையே ஒப்புக் கொடுப்பது அவசியமாய் இருக்கிறது. இவ்வாறு செய்வது அவர்களை தேவனுக்குப் பிரியமான மனைவியாகவும், தாய்களாகவும், தேவனுடைய வார்த்தையில் உள்ள உண்மை களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவும் ஆக்குகிறது. ஆண்களுக்குரிய வகுப்புகள் தவிர பெண்களுக்கென்றும் பிள்ளைகளுக்கென்றும் தனி வேத வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். நல்ல, தேர்ந்த பெண்கள், போதிக்கும் திறமையும் ஆற்றலும் கொண்ட பெண்கள் இக்காரியங்களை முன்னின்று நடத்தலாம்.

ஒரு பெண் போதிப்பதற்கு செல்லுமுன்பு ஜாக்கிரதையாக தயார் செய்து பாடங்களை நன்றாகப் படித்து ஏதாவது வரைபடம், உபகரணங்கள் போன்றவற்றை உபயோகித்து அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம். ஏதோ நேரத்தை போக்கவேண்டும் என்றோ அல்லது குழந்தைகளை அமைதியாக வைத்திருந்தால் பெற்றோர்கள் எந்ததொல்லையும் இல்லாமல் படிப்பார்கள் என்ற நோக்கத்தோடோ அல்லாமல், அவள் என்ன செய்கிறாளோ அதைக்குறித்து எச்சரிப்புள்ளவளாக இருக்கவேண்டும். நம்பிள்ளைகளின் இரட்சிப்புக்குத் தேவையான உண்மைகளைப் போதிக்க குறைந்த சில வருடங்களே இருப்பதால் அவர்களுக்கு போதிக்கும் ஒவ்வொரு தருணமும் அதி, அத்தியாவசமான முக்கியமாகும்.

பெண்கள் ஆராதனையில் உள்ளஅனைத்து காரிங்களுக்கும் அதாவது பாடல், படித்தல், ஜெபித்தல், கொடுத்தல், அவருடைய பந்தியின் மூலமாக அவருடைய மரணத்தை ருசிபார்த்தல், இவையாவிலும் பங்குகொள்ள வேண்டும்.மேற் கூறியவைகள் யாவும் சபையிலுள்ள ஆண் அங்கத்தினராலே நடத்தப்படவேண்டும். பெண்கள் ஆராதனைக் கூடத்தை பெருக்குதல், சுத்தம்

செய்தல்,தூசிகளை அகற்றுதல், தோட்டம் இருந்தால் அதில் உள்ள களைகளை நீக்குதல், இன்னும் ஆராதனைக்கூடத்தில் என்னென்ன வேலைகள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் செய்யவேண்டும். சபைக் கட்டடம் அழுக்காகவும், பரிதாபமாகவும் காணப்பட்டால் அங்கு கூடிவருகிற மக்கள் தேவனுக்கு மரியாதை கொடுக்கிறவிஷயத்தில் சிறிதும் அக்கரையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை உலகிற்குக் காட்டுகிறது. ஆராதனை செய்யும் இடமானது தேவன்மேல் நாம்வைத் திருக்கும் அன்பையும் மரியாதையையும் பிரதிபலிக்கக்கூடியதாக உள்ளது.சொல்லப்போனால், அதற்காக நாம் எடுக்கும்முயற்சி நம்முடைய சொந்த வீட்டிற்கு எடுக்கும் முயற்சியைக் காட்டிலும் சிறந்ததாக இருக்க வேண்டும்.

அநேக சமயங்களில், நிறைய பங்குகளைச் செலுத்தி, தங்கள் கோயில்களை அலங்கரிக்கும் புறஜாதியார் முன்பு வெட்கப்படவேண்டியதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஆராதனைக் கட்டடம் கட்டும்போதும், நிறம்பூசும்போதும், வேறு, மராமத்து வேலை செய்யும்போதும் விசேஷபங்குகளை செலுத்தி, உதவி செய்யவேண்டும். ஒருவேளை புதிய பாடல் புத்தகத்திற்காகவும்,புதிய வேதாகமம் வாங்கும்போதும், கர்த்தருடைய பந்தி வைக்கப்பட்டிருக்கும் மேசையை மூடுவதற்கு துணிவாங்கும்போதும் மக்கள் அதற்காக பணம் கொடுக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்யக்கூடிய விசேஷித்த காரியங்களில் அக்கறை காட்டாமல் இருக்கும்போது அவை மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது.

பெண்கள் கர்த்தருடைய பந்திக்கான அப்பம், திராட்சை ரசம் இவைகளை ஆயத்தப்படுத்தி உதவலாம். நினைவு கூறுதலான இந்தப்பந்தியில்லாமல் ஆராதனை முழுமையான ஒன்றாக இருக்கமுடியாது. ஆண்கள் இவைகளை முன்நின்று வழிநடத்திக் கொடுப்பதால் பெண்கள் அந்தப் பந்திக்கான பாத்திரங்களை சுத்தம் செய்து உதவலாம். பெண்கள் மாபிசைந்து அப்பமாக சுட்டு அதைக்கொண்டுவந்து கொடுக்கும்போது, கர்த்தரின் சரீரத்திற்கு ஞாபகமாக வைக்கப்படும் அப்பம் ஒவ்வொருவாரமும் புதிது,புதிதாக, அன்பான கிறிஸ்தவர்களின் கையினால் தயாரிக்கப்படும் ஒன்றாகிறது. வெளியிலிருந்து வித்தியாசப்பட்ட முறையில் அது வாங்கப்படலாகாது.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரிகளே!கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து வரும் கிறிஸ்தவப் பெண்களின் பங்கு 1.திருமணத்தில் 2.வீட்டில் 3.சமுதாயத்தில் 4.சபையில் என்னென்ன என்று பார்த்தோம். தேவன்நம்மிடத்தில் எதிர்பார்க்கும் இந்த காரியங்களில் நம்பங்கை தேவன் விரும்பும் அளவுக்கு செய்வோம். தேவனுடைய ஆலோசனையை வாசித்து, அதை நிறைவேற்றுவோம். மேற்சொன்ன இக்கார்ரியங்களில் நம் பங்கு எந்த அளவு உள்ளதென்று நம்மைநாமே சோதித்து,பெண்களாகிய நம்மிடம் தேவனின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வோம்.

பெட்டிசோட் ரேச்சல் இராஜநாயகம்.

# யோசுவா ஒரு கண்ணோட்டம்

1. **பொருள்** : தேவனே இரட்சிப்பு

2. **ஆசிரியர்** : யோசுவா

3. **காலம்** : ஏறக்குறைய கி.மு.1400

4. **இந்நூல் பற்றி** :

அ) மோசேயின் மரணத்திலிருந்து -யோசுவாவின் மரணம் வரை ஏறக்குறைய 25-30 ஆண்டுகளை (1407-1377 கி.மு.) இப்புத்தகம் உள்ளடக்கியிருக்கிறது.

ஆ) இப்புத்தகம் யாரால் எழுதப்பட்டது என்று, தானே நேரிடையாக வெளிப்படுத்தவில்லையென்றபோதிலும், யூதர்கள் இந்நூலை யோசுவா எழுதினார் என்று உறுதிபடுத்துகிறார்கள்.

இ) யோசுவாவின் மரணம் (24:29) மற்றும் அவரின் காலத்திற்குப்பின் நடந்த சில நிகழ்வுகளை (15:13-17) அவருக்குப்பின் வந்த வேறொருவர் எழுதியிருக்கிறார் என நம்பப்படுகிறது.

உ) மோசே இஸ்ரவேலர்களை அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டு வந்தார்.யோசுவா இவர்களை வெற்றிக்குள்ளும் ஆசீர்வாதத்திற்குள்ளும் வழிநடத்தினார்.

5. **இந்நூலின் நோக்கம்:**

1. யெகோவா தேவன் தன் ஆளுகைக்குட்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு வழிநடத்தினார் என்பதைக் காட்டுகிறது.
2. ஆதியாகமம் முதல் உபாகமம் வரையுள்ள வரலாற்றில் தொடர்ச்சியாகவும் யோசுவாவின் தலைமையில் நடந்த சரித்திரத்தை சொல்லும் நூலாகவும் இது விளங்குகிறது.
3. யெகோவா தேவனால் யோசுவாவிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாக் காரியங்களையும் அவன் சரியாய் செய்தான் எனக் காட்டுகிறது.
4. யெகோவா தேவன், தன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியதின் மூலம்,வாக்களிக்கப்பட்ட தேசத்தை தம் ஜனங்களுக்கு எப்படிக் கொடுத்தார் எனக்காட்டுகிறது.

6. **இந்நூலின் முக்கியச் செய்தி**

1. விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் (அதி.6)
2. உன் பாவம் உன்னை தொடர்ந்து பிடிக்கும் (அதி.7)

வாலிபர் பகுதி

# சவால்களைச் சமாளிப்போம்

தாயின் கருவறையில் உருக்கொண்டு, தாரணியில் தவழ்ந்து, நிமிர்ந்தெழுந்து நடந்து, இளந்தலைப் பிராயம் அடைந்து, தலையில் நரைப் பூத்து, நடை தளர்ந்து ,நாசியில் சுவாசம் நிற்கும்வரை, நாம் சந்திக்கும் ஒவ்வொரு நாழிகையும் நமக்குச் சவாலாகவே அமையும் இவ்வுலகத்தில், சவால்களை சந்திக்காமல், புறமுதுகிட்டோடு கிறவன் சவத்திற்கு சமமானவன் என்பதை நாம் அறிந்தவர்களாய், அகிலத்திற்குரிய சவால்களை மாத்திரமல்ல, ஆவிக்குரிய சவால்களையும் சந்திக்க ஆயத்தமாக இருப்பது சாலச்சிறந்தது.

தெளிதேனை சொட்டச்சொட்ட வடித்துத்தரும் தேன்கூட்டைப் போன்ற வேதத்தில் ஞானத்தேனை அள்ளித்தரும் நீதிமொழிகளின் நூலில் ***"ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகினது"*** (நீதி.24:10) என்ற உயரிய உண்மையை தூய ஆவியானவரின் துணைகொண்டு விளம்புகிறார் சக்கரவர்த்தி சாலொமோன். ***ஆபத்து,*** வாலிபர்களாகிய நம்மைப் பார்த்து சவால்விடுகையில் எதிர்கொள்ள முடியாமல் தளர்ந்து போனால் நமது நெஞ்சுறுதி திரம்பட இல்லை என்பது திண்ணம். ஆவிக்குரிய ஜீவியத்தில் இரண்டு முக்கியச் சவால்களை உங்கள் முன் நிறுத்த ஆசைப்படுகிறேன்.

## கொற்றவன் எசேக்கியாவின் சவால்

இஸ்ரவேல் மக்களின் கோரிக்கையின்படி, மன்னராட்சி மலர்ந்தது: கீசின் குமாரன் சவுல், ஈசாயின் குமாரன் தாவீது, தாவீதின் குமாரன் சாலொமோன் ஆகியோர் செங்கோல் செலுத்தியபின் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிளவுபட்டது. அதில் ஒரு பிரிவாகிய யூதாவின் பதின்மூன்றாவது அரசனாகிய எசேக்கியா, தான் முடிசூடியபின் கோன்களின் சீமையான எருசலேமில் அநேக ஆண்டுகளுக்குப் பின் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து ஆராதனை முறைமைகளை சீர் செய்தான்.

அரண்மனையின் அரியணையில் அமர்ந்த அரசன் ஆலயத்தின் அலங்கோலத்தை அகற்றி, அதை அலங்கரித்து ஆசாரியர்களை அழைத்து, அறிவுரை அளித்தபோது, ***" என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும் அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும். உங்களை அவர் தெரிந்து கொண்டார் என்றான் "*** (2.நாளா.29:11) நாம், அண்டசராசரங்களை சிருஷ்டித்த தேவனுடைய சமூகத்தில் நின்று சேவை செய்திட வேண்டும் என்கிற சவாலை இவ்வேந்தன் இயம்புகிறார்..

கோவன் கொடுத்த அறிவுரையை உற்று நோக்கின் அவர் ***"இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்"*** என்ற எச்சரிப்பை முதலில் முன் வைக்கிறார் என்று நம்மால் புரிந்துகொள்ள இயலும். இத்தனை நாள் இந்த உலக வழக்கத்தின்படி வாழ்ந்தது போதும், இன்றைக்கே தாமதிக்காமல் தீவிரித்தெழுங்கள் என்ற சவாலை வாலிபர்களாகிய நம்முன்

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்
உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்
இணைந்து நடத்திய

# மூன்றாம் ஆண்டு வேதாகம கருத்தரங்கம்

## கருப்பொருள்: கிறிஸ்துவின் சிலுவை

***6-10-2000***

| கருத்துக்கள் | கருத்தாளர்கள் |
|---|---|
| 1. கிறிஸ்துவை சிலுவையில் மீண்டும் அறைதல் | தாமஸ் தங்கதுரை (மதுரை) |
| 2. சிலுவையை ஏன் பிரசங்கிக்க வேண்டும்? | தேவசகாயம் (அரக்கோணம்) |
| 3. சிலுவையின் நிமித்தம் பாடநுபவித்தல் | ஜி. தானியேல் (சென்னை) |
| 4. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அறிதல் | தானியேல் துரைராஜ் (திருச்சி) |

| | |
|---|---|
| 5. சிலுவைப் பாதையின் முடிவு நித்திய ஜீவன் | பிலிப் (பவானி) |
| 6. சிலுவையால் வாங்கப்பட்ட சபை | தனியரசு (சென்னை) |
| 7. சிலுவையின் பகைஞர் | ஜான் மேக்கன் (சென்னை) |

**7-10-2000**

| | |
|---|---|
| 8. சிலுவையில் ஏன் கிறிஸ்து மரித்தார்? | ஹென்றி மோகன் (ஊட்டி) |
| 9. சிலுவையில் கிறிஸ்துவின் வியாகுலம். | செ. ராஜநாயகம் (காங்கயம்) |
| 10. சிலுவையின் செய்தி | ஆறுமுகம் (திண்டுக்கல்) |
| 11. சிலுவையின் பகைஞர் - சபைக்குள் | பீட்டர் சாலமோன் (சென்னை) |

**இக்கருத்தரங்கம் வருடந்தோறும் நடைபெற ஊக்கமாய் ஜெபியுங்கள்**

அவர் நிறுத்துகிறார். மாய்ந்தழியும் இந்த அவனியின் கவலையால் அவதிப்பட்டதுபோதும் இந்த வாலிபப் பிராயத்திலேயே அசதியாயிராமல் விவேகம் கொண்டவர்களாய் விழித்தெழுவோம்.

சாந்தகுணாளன் மோசேயின் தளபதியாகிய யோசுவா, புண்ணிய பூமியாகிய கானானை சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்ட ஜனங்களைப் பார்த்து ***"சுதந்தரித்துக் கொள்ளப்போகிறதற்கு நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்கள்"*** (யோசுவா.18:3) என்ற கவலை பொதிந்த கேள்வியை எழுப்புகிறார். கிறிஸ்துவின் பிரமாணம் அமுலில் இருக்கும் இந்நாட்களில் வாழும் வாலிபர்களாகிய நாம், பரமகானானை சுதந்தரிக்கும்படி வேத வசனத்தினால் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து பவுல் ரோம சபைக்கு எழுதுகையில் ***"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்"*** என்று யாத்துக் கொடுத்ததை மனதில் நிறுத்தி அசதி கலைவோம்.

எசேக்கியா ராஜாவின் சவாலை நாம் மீண்டும் கவனித்தால், தேவனின் சமூகத்தில் பணிவிடையும், ஊழியமும் செய்ய அவர் நம்மை தெரிந்து கொண்டார் என்பதை அறியலாம். பரிசுத்தமான அவர் சமூகத்தில் யார் நிற்க முடியும் என்கிற வினாவுக்கு எளிமையான எழில்மிகு நடையிலே சங்கீதம் பாடிய தாவீது பதில் தருகிறார். ***"கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமல் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே"*** (சங்.24:4)

தேவன் பரிசுத்தராயிருப்பது போல, வாலிபர்களாகிய நாம் இருந்திடல் வேண்டும். பாவக்கறைகள் படர்ந்து இருக்கையில் என் பித்தம் நீங்கி எப்படி பரிசுத்தம் பெறுவது என்கிற ஐயம் நமக்கு வேண்டா, நமதாண்டவர் தன் குருதியினால் அதை நமக்குத் தருகிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம். அவர் மரணத்திற்கொப்பான திருமுழுக்கிற்கு நம்மை உட்படுத்தி (ரோமர்.6:3,4) அவர் ஒளியில் இருக்கிறதுபோல், நாம் நடக்க முயற்சித்தோமானால் (1.யோ.1:7) இயேசுவின் செங்குருதியால் நாம் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்டு, சுத்தர்களாய் ஜீவிக்க முடியும். ஆகவே ***"அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும்,நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்கிறவர்களைப் பின்பற்றுகிறவர் களாயிருப்போம்"*** (எபி.6:11)

## கொடியவன் கோலியாத்தின் சவால்

இஸ்ரவேலின் ஐக்கிய சாம்ராஜ்ஜியத்தின் முதல் சிம்மாசனத்திற்குரிய சவுல் அரசாண்ட காலமது. பெலிஸ்தர், இஸ்ரவேல் ஜனங்களோடு யுத்தம்புரிய சோக்கோவிலே, ஏகோபித்துக் கூடி வந்தார்கள். இஸ்ரவேலர்கள் ஏலாமில் ஏகமாய் அணிவகுத்து நின்றார்கள். இப்படி பள்ளத்தாக்குகளில் பாளயமிறங்கி இருக்கையில், கொடியவன் கோலியாத், இஸ்ரவேலர்களின் தேவனை நிந்தித்து ஒரு சவால் விடுக்கிறான், ***"பின்னும் அந்தப் பெலிஸ்தன்; நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ண ஒருவனை விடுங்கள் என்று சொல்லிக்கொண்டு வருவான்"*** (1 சாமு 17:10).

நெடிதுயர்ந்த சிகரத்தின்மேல் வான்முகில் முட்ட வளர்ந்த தருபோல், சற்றொப்ப ஒன்பது அடி உயரம் கொண்ட கோலியாத், மிடுக்கான போருடை தரித்து, பட்டயத்துடன் வந்து நின்று விடுத்த சவாலைக்கண்டு கதிகலங்கிப் போனான் சவுல் ராஜா. இவ்வேளையில் தன் மூத்த உடன்பிறப்புகளுக்கு உணவு கொண்டுவந்தான். இளையவனாகிய தாவீது. போஜனம் கொண்டு வந்த அவன் கோலியாத்தின் கொக்கரிப்பைக்கண்டு, தேவனின் துணையோடு தன் ஜனம் மீட்க வெகுண்டெ ழுந்தான்.

வாலிபர்களே, இன்றைக்கும் கோலியாத்தைப் போல் வஞ்சகத்தை சிகரமாய்க் கொண்டு வசீகரத்தில் வளர்ந்தோங்கி, ஞானக்கண்ணை கூசச்செய்யும் ஒளியின் வேஷத்தை பகட்டாடையாய் அணிந்து, பாவம் என்னும் பட்டயத்துடன், ***என்னுடன் போர் புரிபவன் யார்*** என்று நம்மைப் பார்த்து சவால் விடுகிறான் சாத்தான். இச்சவாலைக் கண்டு நாமும் சவுலைப்போல் அச்சம் கொண்டு ஒதுங்கி நிற்காமல், இளைஞனான தாவீதைப் போல், சாத்தானின் வஞ்சக வலையில் சிக்கி சீர்கேடான வழிகளில் போகிறவர்களை, தேவனின் நல்வழி நடத்த வீறுகொண்டு எழுவோம்.

கோலியாத்தை எதிர்த்துப் போரிட களம்புகும் முன்பே, அநேக தடைகளை தாவீது தகர்த்தெறிய வேண்டியதாயிருந்தது. இளைஞனாகிய தாவீதை சகோதரர்களே கடிந்து கொள்ளுகிறார்கள் ***"... நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும் உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான்."*** (1.சாமு.17:28)

வாலிபர்களே! கவனித்தீர்களா! தன் ஜனங்களை மீட்க தாங்களும் முன்வரவில்லை, அப்படி வந்தவனையும், அகங்காரம் பிடித்தவன் என்று வசைபாடுகிறார்கள். தாவீதைப் பார்த்து நீ உனக்கு கொடுக்கப்பட்ட மேய்ப்பனின் வேலையைச் செய். ஆடுகளை யார் வசம் விட்டாய் என்ற வினாக்களை சரம்போல் தொடுத்து சோர்வடையச் செய்து அவனை வீடு திருப்பும்படி முனைகிறார்கள். ஆனால் அவனோ இவர்களின் வார்த்தைகளை ஒரு பொருட்டாக எண்ணாமல், தன் தேவனை நிந்தித்த கோலியாத்துடன் போர்புரிந்தான். நம்மையும் இந்த உலகம் ***நீ உன் வேலையைப் பார்*** என்று சொல்லும், நாம் அதைப் பொருட்படுத்தாமல் பிசாசிற்கு எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுது அவன் நம்மை விட்டோடிப் போவான்.

தாவீது தன் சகோதரர்களால் வந்த தடையை மீறி, தன் கோனிடம் சென்றால்அங்கு சவுல் ***"நீ இந்த பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது. நீ இளைஞன்,அவனோ தன்சிறுவயதுமுதல் யுத்தவீரன் என்றான்"*** (1.சாமு.17:35) வாலிபர்களே நம்மையும் ***உன்னால் இயலாது, அனுபவம்இல்லை*** என்று இந்த அகிலம் அலைக்கழிக்கும். ஆனாலும் தாவீதைப்போல் தடைகளைத்தாண்டி சாத்தானின் சேனைக்குள் தேவனின் பலத்தோடு பாய்வோம். அவர் நிச்சயம் ஜெயம் தருவார் என்பதில் ஐயமில்லை.

எனக்கருமையானவர்களே! அசதியாயிராமல் தேவ சமூகத்தில் ஊழியஞ் செய்யுங்கள் என்ற சவாலையும் சாத்தானை எதிர்த்து நின்று போரிடுங்கள் என்ற சவாலையும் உங்கள் முன் வைத்திருக்கிறேன். நெகேமியாவைப்போல் ஒருகையில் ஆயுதமும், மறுகையில் தேவனுக்கு வேலையும் செய்வோமாக! சவால்களை சந்திக்கும் சத்துவத்தை சமாதானத்தின் தேவன் அருளுவாராக!

ஜே. பிக்கின்ஸ்

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: ஏழு

வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரம், உலகத்தின் முடிவு பற்றிய சம்பவங்களோடு நிறைவுபெற்றிருந்தாலும், ஏழாம் அதிகாரம் அதன் தொடர்ச்சியான சம்பவங்களைக் கொண்டிருக்கவில்லை. இதையே வேறுவிதமாகச் சொல்வதென்றால், வெளிப்படுத்தல் நூலில் உள்ள எஞ்சியுள்ள பகுதிகளெல்லாம், இரண்டாம் வருகைக்குப் பின்னான காரியங்களைத் தான் விவரிக்கிறதென்று சிலர் தவறாக ஊகிப்பது போல, நாமும் ஊகித்து தவறிழைத்து விடக்கூடாது. உண்மையில் இந்த ஏழாம் அதிகாரம், ஆறாம் முத்திரைக்கும் ஏழாம் முத்திரைக்குமான இடைவேளையே.

முதலாம் வசனத்தில், நான்கு தூதர்கள் நின்று, ***"பூமியின் நான்கு திசைகளிலும் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருப்பதை கண்டான்."*** இந்த தூதர்கள் ஒவ்வொரு திசையிலும் இருந்தனர். இவர்களுக்கு காற்றுகளின் மீது அதிகாரம் கொடுக்கப்பட்டது. இது இங்கே தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாயுள்ளது. அந்த நியாயத்தீர்ப்பு, பூமியையும், சமுத்திரத்தையும் சேதப்படுத்தும். (7:2) இந்த நான்கு தூதர்களும், தேவன் தமது ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும், இந்தக் காற்றுகளை தற்காலிகமாகப் பிடித்திருந்தனர். காற்று அடியாதபடி அவைகளைப் பிடித்திருந்தனர்.(7:1)***"பிறகு ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் வந்தான்."*** (7:2) அவன் தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும், பூமியையும், சமுத்திரத்தையும் சேதப்படுத்தவேண்டாம் என்று நான்கு தூதர்களிடம் சொன்னான்(7:7). எசேக்கியேல் 9-ம் அதிகாரம் ஒரு அடையாளமாக, இவ்வதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எசேக்கியேல் 9-ல் எசேக்கியல் தீர்க்கனுக்கு,எருசலேம் பட்டணத்தை சங்கரிக்கும்படி தேவன் அனுப்பப் போகிற ஆறு மனிதர்களைப் பற்றிய ஒரு தரிசனத்தைக் காட்டினார் ஆனால், எருசலேமின் அக்கிரமக்காரர் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஊற்றப் படுவதற்கு முன், அவர்களில் ஒருவனிடத்தில், தேவன்***"நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப் போய் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்பு களினிமித்தம் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்."*** (எசே.9:4) மற்றவர்களிடத்திலோ, ***"நகரமெங்கும் உருவப்போய் அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் தவிர, மற்ற ஒருவனையும் தப்பவிடாமல் ஒருவனுக்கும் இரங்காமலும், எல்லோரையும் சங்கரித்துக் கொன்று போடுங் கள் என்றார்."*** (எசே.9:5,6) எருசலேமின் அக்கிரமக்காரரைத் தண்டித்தபோது, அந்த அழிவிலிருந்து தமது உண்மையுள்ள ஊழியக்காரரை தேவன்

பாதுகாத்தது போல, இப்பொழுது, தேவன் தம்முடைய சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கு, எல்லா அக்கிரமக்காரர் மீதும் தேவன் கொண்டு வர இருக்கிற நித்திய நியாயத்தீர்ப்பிலிருந்து, அவர்களும் முடிவிலே காப்பாற்றப் படுவார்கள் என்ற செய்தியை தேவன் அனுப்பியுள்ளார். (ரோமர்.2:28,29; கலா.6:16; 1.பேதுரு.2:5-9, எபிரேயர்.12:22-23)

இது எழுதப்பட்ட அக்கால கட்டத்தில்,. சபையானது கடுமையான சித்திரவதைக்குள்ளாகியிருந்ததால், மிகுந்த சோர்வு காணப்பட்டது. ஆனால், வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரத்தின் முடிவிலே, தேவன் பூமியின் ராஜாக்களிலிருந்து அடிமைகள் வரையுள்ள எல்லா அக்கிரமக்காரரையும் தண்டிப்பேன் என்பதை தெளிவுப்படுத்தினார்.(வெளி.6:12-17) இப்பொழுது 7-ம் அதிகாரத்தில், எசேக்கியல் 9-ம்அதிகாரத்தின் அடையாளத்தைக் கொண்டு,அவருக்கு உண்மையான சேவை செய்பவர்களை, அழிவிலிருந்து காப்பாற்றுவேன் என்று, அதற்கு இணையான அளவில் தெளிவுப்படுத்துகிறார். ஆவிக்குரிய ரீதியில், முதலிலே காப்பாற்றப்பட்டு, ஒப்புக்கொடுக்கப் படுவார்கள் என்ற உற்சாகமான பாடத்தை நாம் காண்கிறோம். தேவன் தம்முடைய ஜனங்களையும் (2.தீமோ.2:19) அவர்களுடைய கிரியைகளையும் அறிந்திருக்கிறார்.(வெளி.2:9). இப்பூமியின் வாழ்க்கையில் நமக்கு என்ன நடக்கிறது என்பது பிரச்சனையே அல்ல. ஆவிக்குரிய ரீதியில் தேவன் நம்மைக் கைவிடுவதுமில்லை. நம்மைவிட்டு விலகுவதுமில்லை. (எபி.13:5) இங்கே ஒரு கேள்வி எழும்புகிறது. இந்நூலில் தேவன் ஏன் அநேக செய்திகளை அடையாளங் களினால் மறைத்து வைத்துள்ளார்? என்று. அவிசுவாசம் கொண்ட ரோம சாம்ராஜ்ஜியத்தின் மக்களுக்கு இச்செய்தி முற்றிலும் கண்டுபிடிக்க முடியாத ஒன்றாக இருந்திருக்கும். இன்னும், தேவனுடைய வார்த்தைகளை வெறுப்பவர்கள் அதை அறிந்து கொள்வது தேவனுடைய சித்தமல்ல, (தானி.12:10; மத்.11:25-26, 2.கொரி.4:3-4; 2.தெச.2:10-12) இச்செய்தி சங்கேதமொழியில் அல்லாமல், நேரிடையான பொருளில்எழுதப்பட்டிருக்கு மானால், அவர்களுக்கு உறுதியான தண்டனை கிடைத்திருக்கும். இவ்விதம் எழுதி, அதை ரோம அதிகாரிகள் புரிந்து கொள்ளாமல் போனது, கிறிஸ்தவர்கள், தண்டனையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள உதவியிருக்கும். ஆறாம் அதிகாரத்திலிருந்து, இந்நூலின் இறுதிவரை எழுதப்பட்டுள்ள அனைத்திற்கும் இதுதான் உண்மை. ஆனால் தேவனுடைய வார்த்தையை சரியாக அறிந்துள்ள கிறிஸ்தவர்கள், 7-ம்அதிகாரம் உட்பட இந்த அதிகாரங்களிலுள்ள செய்தியின் மூலம் மிகுந்த ஆறுதலை பெற்றிருப்பார்கள். இது, இன்றைக்கு நமக்கு உண்மையாகவே உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தைப் புரிந்து கொள்வதற்கு,தேவனுடைய வார்த்தையைப் பற்றிய முழுமையான அறிவு அவசியம் தேவை என்பதற்கு 7-ம் அதிகாரம் ஒரு தெளிவான உதாரணம் ஆகும்.

தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறியாமை இன்னும் உலகில் நிரம்பியிருக்கிறது. (கர்த்தருடைய சபையிலும் இந்நிலை அடிக்கடி காணப்படுகிறது) தேவனுடைய வார்த்தைகளைப் படிக்கவும் புரிந்து கொள்ளவும் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களைத் தாழ்மையோடு

ஒப்புக்கொடுக்கவும் வெகு சிலரே ஆர்வம் கொண்டுள்ளனர். ஆகையால் வெளிப்படுத்தின விசேஷம் முதலில் கொடுக்கப்பட்ட அந்த பொருளினடிப்படையில், கொஞ்சம்பேரே இன்றைக்குப் புரிந்துகொள்கின்றனர்.வெளி.7:4-8 வசனங்கள் மற்றும் 1,44,000 போன்றவற்றில் இது திடமான உண்மை. இந்த வசனங்கள், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களில், ஒவ்வொன்றிலிருந்தும், தங்கள் நெற்றியில் முத்திரை போடப்பட்ட 12,000 பேர், மொத்தத்தில் 1,44,000 பேர் இரட்சிக்கப்படுவார்கள் என்கிறது. யெகோவா சாட்சிக்காரர்கள், இந்த எண் சொல் அர்த்த அடிப்படையிலானது என்றும், இந்த 1,44,000 பேர் மாத்திரம் ஒரு நாளில் பரலோகம் செல்வர் என்றும் போதிக்கின்றனர். ஆனால், வெளி 7-ம் அதிகாரம்,இந்த 1,44,000 பேர் மாத்திரம் பரலோகம் செல்வர் என்று போதிப்பதில்லை.1,44,000 பேர்தான் பரலோகம் போவர் என்று வேதத்தில் எந்தபகுதியும் போதிப்பதில்லை. இங்கே சொல்லப்பட்டிருப்பவைகளில் சிலவற்றை உருவக அடிப்படையிலும், கொடுக்கப்பட்டிருக்கும் எண்களை சொல் அர்த்த முறையிலும் எடுத்துக் கொள்வது, முறையற்றதும்,தவறானதுமாகும். எண்கள் சொல்லர்த்த முறையிலான தெனில் மற்ற எல்லாமே அதே முறையிலானதாகத்தான் இருக்கவேண்டும். அப்படியானால் அவர்களின் நெற்றிகளில் முத்திரை போடுவதும் சொல்லர்த்த முறையானதாகவே இருக்கும்.(வெளி.7:3;14:1) அது மாத்திரமல்ல, சரீரப்பிரகாரமாக இஸ்ரவேலின் (வெளி.7:4-8) 12 கோத்திரங்களைச் சேர்ந்த ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் மாத்திரம் பரலோகம் போக முடியும். திருமணமான எந்த ஒரு ஆணும், பெண்ணும் போக முடியாது. ஆனால், இப்படிச் சொல்வது அபத்தமானது. மேலுமாக, கோத்திரங்கள் சொல்லர்த்த முறையிலானதெனில், அந்த கோத்திரங்களைச் சேராத, அதே நேரத்தில் அக்கோத்திரங்களுக்குத் தகப்பன்களான, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்களுக்கும் தவறான முறையில் பரலோகத்தில் இடமில்லாமல் போகும். (மாற்கு 8:11). எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த யோசுவா (எண்.13:8), தாண் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்சோன் (நியா.13:2-25) போன்றவர்களுக்கும் தவறான முறையில் இடமில்லாமல் போகும் (எபி.11:30-32) இன்னும், எந்தக்கோத்திரத்தையும் சேராத, புறஜாதிகளுக்கும், தவறான முறையில் இடமில்லாமல் போகும். (மத்.12:21,அப்:11:18; 14:27;28:28, ரோமர்1:16, 2:9-10). 1,44,000 என்பது,வெட்ட வெளிச்சமாகத் தெரியக்கூடிய உருவகமாக இருப்பதால், பரலோகத்தில் சொல்லர்த்த முறையிலான1,44,000 பேர் என்பது சரியானதாக இருக்காது. 1,44,000 பேருக்கு மாத்திரமல்ல, இரட்சிக்கப்படும் படியான வாய்ப்பை, தேவன் எல்லோருக்கும் தருகிறார் (யோ.3:16;தீத்து:2:14; வெளி.3:20;22:17). யெகோவா சாட்சி கூட்டத்தார், இரட்சிக்கப்பட்டவர்களில் மீந்திருப்பவர்களாகிய, எண்ணக்கூடாத திரளானவர்களை உள்ளடக்கிய சரீரப்பிரகாரமான புதிய பூமியை ஆளுகை செய்யும்படியாக, ***மிகச் சிறந்தவர்களாகிய*** இந்த1,44,000 பேர் பரலோகம் செல்வர் என வாதிடுவர். ஆனால், உண்மை என்ன வெனில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின் சரீரப்பிரகாரமான பதவி இருக்காது. (2.பேதுரு.3)

இன்னும், வெளி.7:13-17 வசனங்கள், 1,44,000 பேரையும் எண்ணக்கூடாத திரளானவர்களையும் பரலோகத்தில் ஒன்றாகவே வைப்பார். இரண்டு வேறுபட்ட இடங்களில் அல்ல. எண்ணக்கூடாத திரளான ஜனங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள் (7:9) அந்த சிங்காசனம் பரலோகத்தில் தான் உள்ளது. (வெளி.1:4;4:2-10) பூமியில் அல்ல. எண்ணக்கூடாத திரளான ஜனங்கள் தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாக நிற்பார்கள்(7:18) அந்த ஆலயமும் பரலோகத்தில் தான் உள்ளது (11:19) பூமியில் அல்ல.உண்மையில் 1,44,000 பேர் என்பதும் எண்ணக்கூடாத திரளான ஜனங்கள் என்பதும் ஒரே பிரிவினர் தான்.

பெரும்பாலான, ஆயிரம் வருட அரசாட்சி கொள்ளைக்காரர்கள், பரிசுத்தவான்களின் பரவசப்படுதலுக்குப் பின்னாக வரும்,என்று பொய்யாக நம்பப்படுகிற உபத்திரவ காலத்தின் ஆரம்பத்தில், கிறிஸ்தவத்திற்கு மனமாற்றப் படுகிற யூதர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறதென்று போதிக்கின்றனர். ஆனால் உண்மையில் ***பரவசப்படுதல், உபத்திரவ காலம்*** இன்னும் ***ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைகள்*** எல்லாம் முற்றிலும் தவறானதும், தேவ வசனங்களின் உபதேசத்திற்கு புறம்பானதுமாகும். யெகோவா சாட்சிக் காரர்களின் உபதேசங்கள் தவறு என்பதற்கு, மேலே கொடுக்கப்பட்டவை களிலுள்ள, பெரும் பாலானவைகள், இந்த ஆயிர வருட அரசாட்சிக்கொள்கை தவறு என்பதற்கு போதுமானது. உருவக பாணியில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த எண்ணிக்கையை சொல்லர்த்த முறையில் எடுத்துக்கொள்ள முடியாது. அப்படியானால், இந்த 1,44,000 பேர் யார்? என்ற கேள்வி எழுகிறது. இந்தப்பகுதியில் இஸ்ரவேலின் 12 . கோத்திரங்களைச் சேர்ந்த முத்திரையிடப்பட்ட 1,44,000 பேர், ஆவிக்குரிய இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கிறது. இந்த எண்ணானது, நித்திய காலமாக பரலோகத்திலிருக்கப்போகிற, தேவனாலே இரட்சிக்கப்பட்ட எல்லோரையும் குறிக்கிறதாகவே தோன்று கிறது.(வெளி.7:13-17) எண் ஆயிரம் என்பது, ஒரு பெரிய எண்ணிக்கையைக் குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் பொதுவாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளது .(சங்.90:4; 2பேதுரு.3:8; வெளி.14:1; 20:1-6) 12 என்பது இரண்டு பிரமாணங்களின் கீழான தேவனுடைய ஜனங்களோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். (வெளி.21,12,14 ஐ பாருங்கள்) 12 யும் 12யும் பெருக்கி, அத்தோடு 1000 யும் பெருக்குவது; எல்லாக்காலத்திலும் இரட்சிக்கப்பட்ட, எண்ணக்கூடாத திரளான ஜனக்கூட்டத்திற்கு அடையாளமாக இருப்பதற்கு எல்லா வாய்ப்புகளுமுண்டு.(வெளி.7:9-17)

வெளி.7:4-8 ஐ பொருத்தவரை, இன்னும் சுவாரசியமான சில காரியங்கள் உண்டு. வெளி7-ல் ஆவிக்குரிய இஸ்ரவேலில், உண்மையான 12 கோத்திரங்களில் தாணும், எப்பிராயீமும் விடுபட்டு, லேவியும், யோசேப்பும் சேர்க்கப்பட்டுள்ளனர். பழைய ஏற்பாட்டில், தேவன், அவருடைய பிரமாணங்களைப் பின்பற்றுவதிலிருந்து, பின்வாங்குகிற புருஷனையும், ஸ்திரீயையும், குடும்பத்தையும் அல்லது கோத்திரத்தையும் குலைத்துப் போடுவேன் என்று வாக்களித்துள்ளார்(உபா.29:18-20) தாண் கோத்திரத்தார்

தேவனைப் பின்பற்றுவதிலிருந்து விலகி விக்கிரங்களைப் பின்பற்றி வணங்கினார்கள்.(நியா.18:30-31;1 ராஜா.12:28-29) எப்பிராயீமும், விக்கிரக வணக்கத்திற்கு திரும்பினான். (ஓசியா.4:17;7:8.11-16) வெளிப்படுத்தல் 7-ம்அதிகாரத்தில் தேவனுக்கு உண்மையுள்ள கோத்திரங்களின் பட்டியலில் விக்கிரக வணக்கத்தோடு சம்பந்தப்பட்ட இந்த இரண்டு கோத்திரத்தாரின் பெயர்களும் இல்லை. தேவன் எச்சரித்தது போலவே அவர்கள் பெயர் நீக்கப்பட்டது.ஆவிக்குரிய இஸ்ரவேலின் அந்த 12 கோத்திரங்களில், இவர்களுக்கு பதிலாக லேவி மற்றும் யோசேப்பு பெயர்கள் இடம்பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டில், யோசேப்புக்கான கோத்திரம் மனாசே, எப்பிராயீம் என்று இரண்டு கோத்திரமாக பிரிக்கப்பட்டது. லேவிக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. ஆனால், யோசேப்பினுடைய பெயர் “ *மேகம் போன்ற திரளான சாட்சிகளில் ஒருவனாக*” விசுவாச வீரர்களை கொண்ட எபிரேயர் 11-ம்அதிகாரத்தில் உள்ளது. (எபி.11:22) யோசேப்பின் பெயர் விசுவாசத்திற்கும், தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கும் அடையாளமாக உள்ளது. இவன் பெயர் அவிசுவாசமுள்ள எப்பிராயீமுக்கு மாற்றாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதுபோலவே, லேவி நீதியுள்ளவனாக இருந்தபடியால், அவனோடு, தேவன் தமது ஆசாரியத்துவ உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.(மல்.2:4-7) புதிய ஏற்பாட்டில் உண்மையுள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும், லேவி முறையின்படி ஆசாரியர்களாக இருக்கிறார்கள் (1.பேதுரு 2:5,9; வெளி.1:6;5:10) ஆகையால்,வெளி 7-ல் அவிசுவாசமுள்ள தாண் நீக்கப்பட்டு விசுவாசமுள்ள லேவி சேர்க்கப்பட்டுள்ளார். வெளிப்படுத்தல்7-ம் அதிகாரமானது ஆவிக்குரிய இஸ்ரவேலைக் குறிப்பதற்கு உருவக எண்ணைத் தான் உபயோகிக்கிறதென்பதற்கு இது ஒரு திட்டமான சான்றாகும்.

வெளி.7:9-17 வசனங்கள், தேவனுடைய பிள்ளைகள் படுகிற உபத்திரவத்தில் மிகுந்த ஆறுதலைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது. யோவான் மூலமாக பரலோகத்தில் “ ***இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும் , ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளை தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாகவும் காண்கிறோம்***” (7:9) “***அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்***” (7:10) இது தேவனுடைய மீட்கப்பட்டவர்களாலே ஏறெடுக்கப்பட்ட உண்மையான துதி ஆகும். தம்முடைய சிங்காசனத்தைச் சுற்றிலுமிருக்கிற எல்லா தூதர்களாலும் 24 மூப்பர்களாலும் நான்கு மிருகங்களாலும் தேவன் தொழுதுகொள்ளப்பட்டார் (வெளி.7.11) “***அவர்கள் ஆமென் எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதா காலங் களிலும் உண்டாவதாக; ஆமென் என்றார்கள்*** ”(7:12) உண்மையாகவே தேவன் இந்தத்துதிக்குப் பாத்திரமானவர்.வசனம் 13-ல் மூப்பர்களில் ஒருவன் பரலோகத் திலுள்ள எண்ணத் ...ரள் கூட்ட ஜனங்களைப் பற்றி யோவானிடத்தில் கேட்டான். நீதியின்

வஸ்திரமாகிய வெள்ளை அங்கிகளை அவர்கள் தரித்து இருந்தார்கள்(வெளி 7:13-14,3:5,18;4:,19:7-8,14) யோவானிடத்தில் மூப்பர்களில் ஒருவன் இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தவர்கள் என்று கேட்டான். யோவான் பதிலாக, ***"ஆண்டவனே அது உமக்கே தெரியும்"*** என்றான். பிறகு நாம், ***"இவர்கள் மிகுந்த உபத்திரவத் திலிருந்து வந்தவர்கள் இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியான வருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை. இனிதாகமடையவது மில்லை;வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை. சிங்காசனதின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டி யானவரே இவர்கள் மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணிருள்ள ஊற்றுக்க ளண்டைக்கு நடத்துவார். தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்"*** (வெளி.7:14-17) என்று சொல்லப்பட்டிருக்கிறோம். இங்கே நாம் துன்புறுத்தலை சகித்துக்கொள்வது அவசியம் என்று கவனிக்கிறோம். (அப்.14:22;2 தீமோ2:12 ;3:12,1பேதுரு 2:19-25 வசனங்களையும் காண்க) இன்னும், எல்லா அக்கிரமத்தினின்றும் சுத்திகரித்துக் கொள்வதும் அவசியம் என்று காண்கிறோம். (யோவா.8:31-36 ;அப்.15:19, ரோமர்6:16-23, 1 யோவா.3:27) .இவைகளுக்கெல்லாம் பலனாக தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும்படியான நித்திய வாழ்வு கிடைக்கும். அங்கே, பசியும், தாகமும் கண்ணீரும் இல்லை. மேலும் பரலோகத்தில் நாம் செய்ய வேண்டிய வேலை உண்டென்பதையும் காண்கிறோம். ஆம்,நம்முடைய பூமிக்குரிய பிரயாசங்களி லிருந்து இளைப்பாறுதல் இருக்கும். (எபி.3:1-4,11; வெளி.14:13) அதற்கு பிறகு, பரலோகத்தில் நித்திய காலமாக தேவனுக்கு சேவகம் செய்வோம் (வெளி.22:3-5) இப்பூமியில் நாம் தேவனுக்கு செய்யும் வேலையானது, பரலோகத்தில் நாம் நித்திய காலமாக அவருக்குச் செய்ய வேண்டிய சேவைக்குப் பயிற்சியளிக்கிறது.

முதலாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த, கிறிஸ்துவினிமித்தம் துன்புறுத்தப்பட்டு உண்மையாய் வாழ்ந்த, கிறிஸ்தவர்களுக்கு இந்த வார்த்தைகள் ஆழமான அர்த்தத்தைக் கொண்டதாக இருந்து மிகுந்த ஆறுதலை தந்திருக்கும். இன்றைக்கும், நமக்கு இவை அதே காரியத்தை செய்யக்கூடியதாக இருக்க ,வேண்டும். வெளிப்படுத்தல் 7-ம் அதிகாரத்தில் தேவனுக்கு உண்மையாக நாம் வாழ்ந்தால் எல்லா துன்மார்க்கர் மேல் வரும் நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் காப்பாற்றப்படு வோம் என்ற உண்மையை அறிந்து, மிகுந்த ஆறுதலைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. நமக்கு வரும் பெரும் உபத்திரவங்களை நாம் சகித்து, இறுதிவரை தேவனுக்கு உண்மையாக இருந்தால், ஒப்பிடப்படமுடியாத அநேக ஆசீர்வாதங் களோடு, நித்திய காலமாக தேவனோடிருப்போம். ஆகையால் நாம் நீதியான வாழ்க்கை, உபத்திரவங்களை சகித்தல், பூமியில் எஞ்சியிருக்கிற காலமெல்லாம் எல்லா காரியங்களையும் மேற்கொள்ளுதல் போன்ற வஸ்திரங்கள்ளை தரித்துக் கொள்வோம். (1.பேதுரு.4:1-2;வெளி.2:10)

**Jon Macon** **EZSR**

தெரிந்து கொள்ளுங்கள்

சென்றமாதத் தொடர்ச்சி...

# சபைக்கும் - பிரிவுச்சபை கூட்டத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடுகள்

| புதிய ஏற்பாட்டின் சபை | பிரிவுச்சபை கூட்டம் |
| --- | --- |
| 1. தெய்வீகத் துவக்கம் (மத்.16:18; தானி.2:44) | 1. தெய்வீகத் துவக்கமின்றி மனிதர்களால் உருவானவை. கர்த்தர் குழப்பத்திற்கோ நாமகரணக்கூட்டத்திற்கோ காரணியல்ல. (1.கொரி. 14:33) சச்சரவுகளையும், முரண்பாடுகளையும்கொண்ட நாமகரணக் கூட்டத்தை ஸ்தாபித்து தமது ஜெபத்தில் கேட்டஒற்றுமைக்கு எதிராக தாமே செயல்படவில்லை. (யோவா.17:20,21) |
| 2. என்றென்றைக்கும் நிற்கும். (தானி. 2:44; எபிரேயர்.10:28,29) | 2. வேரோடே பிடுங்கப்படும்.(மத்.15:13) |
| 3. வேதாகமப் பெயர்களையே கொண்டவை. | 3. மனிதனிட்ட பெயர்களைக் கொண்டவை, மனித ஆளுகை அமைப்புகளையுமும், செயலாக்கங்களையும், விசேஷ நாட்களையும், ஆசரிப்புகளையும் பெற்றிருப்பவை. நாம் வேத வாக்கியங்களின்படி பேச வேண்டியவர்கள். (1.பேதுரு.4:11) |
| 4. முதல் நூற்றாண்டில் துவங்கியது (அப்.2:47) | 4. கத்தோலிக்கம் 7-ம் நூற்றாண்டிலும், புரோட்டஸ்டண்ட்டுகள் 16-ம் நூற்றாண்டிலும் துவக்கம் பெற்றவை. |
| 5. தலைமையகம் பரலோகத்தில் உள்ளது.(எபே.1:22,23.1. பேது.3:22) | 5. பூமியில் தலைமையகங்களைக் கொண்டவை சில ரோமாபுரியிலும் சால்ட்லேக் சிட்டியிலும், இண்டிப் பெண்டன்ஸ், மிஸாவ்ரி, கிலீவ் லேண்ட் டென்னஸி போன்ற இடங்களிலும் தலைமையகத்தை கொண்டவைகள். |

| | |
|---|---|
| 6. வேதத்தை மற்றும் பின் பற்றுகிறது.(அப்.2:42,1பேதுரு 4:11கலா.1:6-9,வெளி.22:18, வெளி, 22:19, யூதா.3) | 6. உபதேசக் கோட்பாடுகள், மனித கருத்துக்களையும் கட்டுப்பாடு களையும் விசுவாச அறிக்கை களையும் கொண்டுள்ளன. இவைகளெல்லாவற் றிலும் வசனமேபோதுமானவைகளாய் உள்ளன.(2.தீமோ.3:16,17) |
| 7. இரட்சிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் (அப்.2:47) | 7. சேர்ந்து கொள்கிறார்கள், தேவ னுடைய குடும்பத்தில் நீங்கலாக சேருவதில்லை. மாறாக சேர்க்கப் படுகிறார்கள். (1.தீமோ.3:15). |
| 8. இரட்சிப்பிற்கு அவசியமானது (எபே.5.23, அப்.20:28) | 8. இரட்சிக்கப்பட்டிருப்பதாக நினைக்கலாம். ஆனால் நாமகரண கூட்டத்தில் மட்டுமே அங்கம் வகிக்கக்கூடும். இப்படியாக நாமகரண கூட்டம் தனக்குத்தானே ஆக்கினைக்குள்ளாகிறது. எனவே இரட்சிப்பிற்கு தொடர்பில்லை. |
| 9. கல்வாரி இரத்தம் விலையாகக் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்டது. (அப்.20:28,எபே:5:27). | 9. அப்படியொரு கிரயம் செலுத்தப் ப்டவில்லை |
| 10. அப்போஸ்தலர்கள் இதன் முதல் அங்கத்தினர்கள் | 10. மனிதனின் நாமகரணக் கூட்டங்களில் அப்போஸ்தலர்கள் அங்கத்துவமில்லை. சொல்லப் போனால், நாமகரண கூட்டங்களின் தோற்றங்களின்போது, அப்போஸ் தலர்கள் ஒருவர் கூட உயிருடன் இல்லை. |
| 11. சபை கிறிஸ்துவின் தேர்வு (மத்.16:18,19; கொலோ.1:24) | 11. பிரிவுசபை மனிதனின் தேர்வு (சங்.127:1 ஐ வாசிக்கவும்). |
| 12. சபைக்குள் நுழைய விசுவாசித்து மனந்திரும்ப, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றனர். (அப்.2:36-47,8:26-40) | 12. மனித சட்டங்களின்படி துவக்கம் பெறுகிறது. ஒரு மனிதன் குறிப்பிட்ட நாமகரணக்கூட்டத்தில் அங்கம் பெறகிருபையின் அநுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். என்பது கட்டுக்கதை. குறிப்பிட்ட நாமகரணக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட ஓட்டெடுப்பு |

| | |
|---|---|
| | நடத்தப்பட்டு தேர்ந்தெடுப்பார்கள். பின்னாளில் அந்த நபரின் மனச் சாட்சி உறுத்தப்படுவதால் தமது பொய்யை ஒப்புக்கொள்ளும் போது அந்த நாமகரணக் கூட்டத்தின் ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார். சுருங்கச் சொல்லின் நான் பொய் சொன்னதற்காக என்னை சபையிலே சேர்த்துக்கொண்டார்கள். இப்பொழுது உண்மையைச் சொன்னதாலே வெளியேற்றப் பட்டேன் என்பார். |
| 13. புதிய ஏற்பாட்டு சபையின் தோற்றம்(சகரியா.1:16;ஏசாயா. 2:1-4; மாற்கு.9:1 லூக்கா24:46; அப்.1:1-4) | 13. பல வித்தியாசப்பட்ட இடங்களில் தோன்றியவை. நாமகரண கூட்டங்களில் ஒன்று கூட எருசலேமில் தோன்றியது இல்லை. |

**கிறிஸ்துவின் சபை என் ஒரு பிரிவுக் கூட்டமல்ல என்பதற்கான பல காரணங்கள்**

1.பிரிவுக் கூட்டம் கர்த்தருடையஜெபத்திற்கு முரணானது. (யோவான். 17:20,21)

2.அவிசுவாசித்தின் விளைவே பிரிவுக் கூட்டம் (யோவான்.17:20,21).

3.கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை. ஆதலால் நாமகரணக் கூட்டம் தவறானது. (1.கொரி.11-13)

4.கிறிஸ்துவுக்குள் பல சரீரங்களல்ல.ஒரே சரீரம் மட்டுமே.ஆதலால் நாமகரணக் கூட்டங்கள் தவறானவை.(1.கொரி.12:13,20எபே.4:4, கொலோ.3:15)

5.கல்வாரிச் சிலுவையின் நோக்கங்களுக்கு பிரிவுக் கூட்டம் முரண்பாடான ஒன்று. (எபே.2:15,16)

6.பிரிவுக் கூட்டம் தேவனை ஆராதிப்பது வீண் (மத்.15:9, சங்.127:1)

7.தேவன் ஐக்கியப்பட்ட வீடாயிருக்க விரும்புகையில் நாமகரணக் கூட்டம் பிரிவு பட்ட வீடாக்குகின்றன. (யோசுவா.24:15, ஆமோஸ்.3:3, மாற்கு.3:25)

8.பிரிவுக்கூட்டமில்லாத (பிளவுப்படாத) கிறிஸ்தவத்திற்கான பவுலின் வேண்டு கோளை முரணுள்ளத்தாக ஆக்குகிறது. நாமகரணக் கூட்டங்கள்.(1.கொரி.1:10)

9.பிரிவுக்கூட்டம் தேவன் வெறுக்கிற பாவச் செயல் (நீதி.6:6-10)

10.பிரிவுக் கூட்டம் அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு எதிரானது (ரோ.16:17,18)

11.தேவன் குழப்பத்திற்கு தேவனாயிருக்கிறார் என நாமகரண கூட்டங்கள் காட்டுகின்றன.(1.கொரி.14:33)

12.பிரிவுக் கூட்டம் அப்போஸ்தலர்களைச் சார்ந்தவைகளல்ல.

13.பிரிவுக் கூட்டங்களின் இலக்கு அழிவு. (மாற்கு.3:24,25)

# பிரிவுக் கூட்டங்களைத் தவிர்ப்பதற்கான நிவாரணம்

மார்க்க ரீதியான விஷயங்களில் வேதத்தையே முழு அளவுகோலாகக் கொண்டு எவ்விதத்திலும் அதற்கென ஒப்புக்கொடுக்கக் கூடியவர்களாக நாம் இருக்கவேண்டும். மூன்று நபர்கள் தங்களின் (அதிகாரப்படி) நேர வித்தியாசத்தைக் காண்பார்களாகில், ஒரு சரியான எல்லாராலும் ஏற்றுக்கொள்ள ப்பட்ட, ராணுவ நேரத்தைப் பார்த்து, சரி செய்து கொள்ள இயலும்.அது காரியங்களை ஒழுங்குபடுத்தி ஒற்றுமையை ஏற்படுத்தும். ஒரு மனிதன் மூன்று வித்தியாசப்பட்ட அஞ்சலகங்களுக்குச் சென்று, தனது தபாலுக்கு அஞ்சல் தலை மதிப்பைக்கேட்டாலும், ஒரே அளவு அஞ்சல்தலை மதிப்பைத்தான் குறிப்பிடுவார். ஏன்?ஏனெனில் ஒவ்வொரு அஞ்சலக ஊழியரும் ஒருவழிகாட்டி புத்தகத்தை (கையேட்டை) பின்பற்றுவதுதான். ஒரே ஒரு அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்படும் போது ஒற்றுமை நிலைக்கும். அதேபோல், எல்லா மனிதர்களும் தங்கள் உபதேசங்கள், மனிதக் கோட்பாடுகள், விசுவாச அறிக்கைகள், ஒழுங்கு விதிகள், கொள்கைகள், சுய (கற்பனை) எண்ணங்கள், ஒருவேளை இப்படியிருக்கலாம் எனும் நினைவுகள், ஆகியவற்றை அகற்றி கீழ்ப்படிதலுள்ள உணர்வுகளோடு, சுய கௌரவத்தையும் விட்டவர்களாயும் காணப்படின் அவர்களின் இருதயம் தேவவசனத்தை ஏற்றுக்கொள்ளும்படி மாறும்போது, அப்பொழுது மாத்திரமே. ஒற்றுமை பிரதிபலிக்கும். இப்படிப்பட்ட ஒரு ஸ்திரத்தன்மை, நாமகரணக் கூட்டத்திற்கு சாவு மணியடிக்கும். நம்மை வெறுமையாக்கி, நமக்கென எந்த பட்டமும் சூட்டித்துக் கொள்ளாமல், தேவனுடைய வசன அதிகாரத்திற்கு நம்மை கீழ்ப்படுத்துவதேயன்றி வேறெதுக்கும் நம்மை கீழ்ப்படுத்தாமல் இருக்க நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே ***நாம் ஒற்றுமையின் ஆவியை*** உடையவர்களாவோம். எபேசியர்.4:1-ல் கூறப்பட்டுள்ள ஒற்றுமை ஆளுகை அமைப்பாகிய ஒரே ஆவி - ஒற்றுமைக்கு வழிகாட்டியாக; ஒரே நம்பிக்கை - ஒற்றுமையான வேட்கையாக; ஒரே விசுவாசம்-ஒற்றுமைக்கான செய்தியாக; ஒரே கர்த்தர் -ஒற்றுமைக்கான அதிகாரமாக; ஒரே ஞானஸ்நானம் - ஒற்றுமைக்கான செயல்பாடாக மற்றும் ஒரே தேவன் - ஆராதிப்பதில் ஒற்றுமையை கொள்ளும் போது அந்த ஒற்றுமையின் ஆவியைப் பெற இயலும்.

இன்னொரு வழியில் கவனித்துப் பார்த்தால், தேவனுடைய மாறாத விதி என்பது ***ஒவ்வொன்றும் அதனதன் இனத்துக்கேற்ற வித்துக்களைப் பிறப்பிக்கக்கடவது.*** என்பது தான் (ஆதி.1:12) அதுபோலவே நாம் சுவிசேஷத்தை மட்டும் பிரசங்கித்தால் அப்போஸ்தலர்கள் காலத்தில் எப்படி நாமகரண கூட்டமேயில்லாத உண்மையான ஒரே ஒரு புதிய ஏற்பாட்டுச் சபையை மாத்திரம் அந்த சுவிசேஷ பிரசங்கம் உருவாக்கியதுபோல இன்னும் உருவாக்கக் கூடும். வேறு கூட்டங்களில் விசுவாசத்தை வைப்பது, தேவனுடைய மாறாத விதிகளில் ஒன்றை மறுதலிப்பதாகும்.

கிறிஸ்துவின் சபை ஒரு பிரிவுக்கூட்டமல்ல.அப்படி அது இருந்திருக்குமேயாகில் அது நிலைத்திருக்கும்படி உரிமையை விட்டுக்கொடுத்தல் அவசியம். (மத்.15:13). நமது கர்த்தர் வெறும் நாம காரணருமல்ல, பிரிவை எதிர்த்தவர். எனவே அவருடைய சபையும் அப்படியிருக்கலாகாது. அவரது சபையின் மன்றாட்டு தூய்மையானது. புதிய ஏற்பாட்டின் படியானது, நாமகரணமற்ற கிறிஸ்தவம். அநேகர் இதில் கலந்திருப்பது எவ்வளவு மன உற்சாகத்தையளிக்கிறது.

**தமிழில் E.A. ஆறுமுகம்**

## அப்படியே மறுபடியும் வருவார்

1. எல்லாரும் பார்க்கும்படி எடுத்துக்கொள்ளப்பட்டார் - அப்படியே மீண்டும் வருவார். - இரகசியமாய் அல்ல. (அப்.1:11; வெளி.1:7)

2. மேகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார் - அப்படியே மேகங்களோடு வருவார் (அப்.1:9, 1தெச.4:16,17)

3. தூதர்களுடன் எடுத்துக்கொள்ளப்பட்டார் - அப்படியே எக்காள தூதனின் சத்தத்தோடு வருவார் (அப்.1:10, 2 தெச.1:7-9)


## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு,சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் ***(Gospel Tracts)*** உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை.** தேவைக்கு முந்துங்கள்!

### தலைப்புகள்

***1. உன்னை நீயே எண்ணிப்பார்***
***2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்***
***3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?***
***4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...***
***5. ஞானஸ்நானம்***
***6. யார் கிறிஸ்தவன்?***
***7. ஆராதனை***
***8. சபை என்பதுஎன்ன?***

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம்* - 638 701. இந்தியா
© 04257 - 20030

சென்றமாதத் தொடர்ச்சி

# இடறுதலுக்கான கல்

ஞானஸ்நானம் பெறவில்லை, பாவமன்னிப்புக்கென்றும் ஞானஸ்நானம் பெறவில்லை. இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாக அவர் ஞானஸ்நானம் பெற்றார்.(மத்.3:15). கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றும் போது ஒருவன் எல்லா நீதியையும் நிறைவேற்றுகிறான் (சங்.119:172)ஞானஸ்நானம் மூன்று படிகளால் ஆனது. தண்ணீருக்குப்போதல், தண்ணீருக்குள் போதல்... தண்ணீரை விட்டுவெளிவருதல் (கொலோ.2:12; ரோமர்.6:24). தெளிப்பதும், ஊற்றுவதும் வேதாகமம் எதிர் பார்ப்பதை திருப்தி செய்யாது.

யோவான் ஸ்நானகன் அநேகருக்கு திருமுழுக்குக் கொடுத்தான். (மாற்கு.1:1-13; லூக்கா.3:3)யோவான் ஞானஸ்நானத்தை ஏற்க மறுத்தவர்கள் ***"அவனால் ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்கு கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்"*** (லூக்.14:29-30). ஏன் நாம் கர்த்தருடைய கட்டளையான ஞானஸ்நானத்தைக் குறித்து இடற வேண்டும்? சபையின் பிறந்த நாளில் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் ஏறக்குறைய 3000ம் ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.(அப்.2:1-4; அப்.2:36-38,41-47).

யோவான் ஞானஸ்நானம் காலாவதி ஆனபின் அதைப் பெற்றவர்கள் கூட இரண்டாவது முறையாக ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. (அப்.18:24-28; 19:1-7). இன்றும் சிலர், இரட்சிக்கப்பட்டபின் ஞானஸ்நானம் பெற்றோம் என்கிறார்கள், வேதத்தின்படி அது தவறாகும். ஆகவே அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். (அப்.2:38; மத்.26:28) நீங்கள் உங்கள் ஞானஸ்நானத்தைக் குறித்து திருப்தி அடைந்திருக்கிறீர்களா என்பது கேள்வியே அல்ல, தேவன் உங்கள் ஞானஸ்நானத்தில் திருப்திப்பட்டிருக்கிறாரா என்பது தான் கேள்வி?

3.ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிப்பது குறித்து இடறுகிறீர்களா? புதிய ஏற்பாட்டை வாசித்துப்பாருங்கள். ஆர்கன், பியானோ, கச்சேரிகள், பாடகர் குழு, தனிப்பாடல்கள் இவைகளை நீங்கள் பார்க்கவே முடியாது. தயவு செய்து மத்.26:30; மாற்கு.14:26;அப்.16:25; ரோமர்.15:9. 1.கொரி.14:15; எபே.5:19, கொலோ.3:16;எபி.2:12, யாக்.5:13)ஆகிய வசனங்களை வாசியுங்கள். இந்த வசனங்கள் பாடுவதை மாத்திரம் போதிக்கிறது. இசைக்கருவிகள் பயன்படுத்துவதைக்குறித்து அல்ல. தேவன் குறிப்பிட்ட மற்றும் பொதுவான கட்டளைகளை கொடுத்திருக்கிறார். தேவன் நோவாவை கொப்பேர் மரத்தினால் பேழையை செய்யும்படி கட்டளையிட்டபோது மற்ற எல்லா மரமும் விலக்கப்பட்டது. (ஆதி.6:14). தேவன் நாகமானிடம் யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகச் சொன்ன போது மற்ற எல்லா நதியும் விலக்கப்பட்டது.(2.இராஜ.5:8-14).

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகோஸ்தே நாளில் இசைக்கருவிகள் அன்றைக்கே இருந்தபோதிலும் கிறிஸ்துவின் சபை அதைப் பயன்படுத்தவில்லை. அமெரிக்கன் என்சைக்ளோபீடியாவின் பாகம் 12ல், பக்கம் 688ஐ பார்த்தால், போவிடாலியன் தான் மேற்கு ஐரோப்பியா சபைகளில் சுமார் 670ம் ஆண்டில் ஆர்கனை அறிமுகப்படுத்தினார் என்பது தெரியவரும். கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை ஒரு போதும் அதை பயன்படுத்தியதில்லை. கர்த்தருடைய சபையானது கி.பி.33ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. (அப்.2:1-4,36-38,42-47)..

கிறிஸ்துவின் சபையார் வித்தியாசமாய் இருக்கவேண்டும் என்று முயற்சிக்கவில்லை"... ***பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக... நாங்கள் தைரியமாய்ப் போராடுகிறோம்."*** (யூதா.3) சில பிரபலமான அறிஞர்கள் வேதாகமம் இசைக்கருவிகளை விலக்கியிருப்பதைக் குறித்து தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளிலிருந்து சிலவற்றை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

ஜான் ***வெஸ்லி***, மெதடிஸ்டு இயக்கத்தின் ஸ்தாபகர் கூறுகையில், எங்கள் ஆலயத்தில் ஆர்கன் இருப்பதைக் குறித்து ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் அது பார்க்கப்படாமலும், கேட்கப்படாமலும் இருக்கவேண்டும் என்கிறார்.

***ஜான் கால்வின்***, ப்ரொடஸ்டண்ட் இயக்கத்தின் தலைவர் கூறுகையில், தேவனைத் துதித்துக் கொண்டாடுவதில் இசைக்கருவிகள், தூபம் காட்டுவதும், விளக்குகள் ஏற்றுவதும்,நியாயப்பிரமாணத்தில் நிழலாயிருக்கின்ற மற்ற காரியங்களை மீட்டமைப்பதும் எவ்வளவு அர்த்தமற்றதாயிருக்குமோ அவ்வளவு அர்த்தமற்றதாகவே இருக்கிறது என்கிறார்.

***ஆடம் கிளார்க்***, அவருடைய விளக்கவுரையில் பாகம 6ல் பக்கம் 686ல் எழுதுகையில் நான் ஒரு வயதான மனிதன், ஒரு முதிர்ந்த ஊழியக்காரன், நான் தேவனுடைய ஆராதனையில் இசைக்கருவிகள் எவ்வித நன்மையும் செய்ததாக ஒருபோதும் அறியவில்லை. மாறாக, அது தீமைகளை செய்திருக்கிறது என்று நம்புவதற்கு காரணமுடையவனாயிருக்கின்றேன். இசையை, ஒரு அறிவியலாக, நான் மதிக்கிறேன், பாராட்டுகிறேன், ஆனால் கர்த்தருடைய வீட்டில் இசைக் கருவிகளை நான் வெறுக்கிறேன்,ஒதுக்குகிறேன் என்று கூறுகிறார்.

உண்மையான ஆராதனைக்கு மனிதனின் சிறந்த முயற்சி தேவை, அது கர்த்தருடைய வழிகாட்டுதலுக்கு ஏற்றதாக இருத்தல் மிக அவசியம். (யோவான்.4:24;அப்.2:1-4,36,38,41-47). மனிதனல்ல, தேவனே ஆராதனையின் செயல்பாடுகளையும், எல்லைகளையும் தனக்கு உகந்ததாக ஏற்படுத்துகிறார் நிர்ணயித்திருக்கிறார். தங்கள் சொந்த முறையில் தேவனை ஆராதிக்கிறவர்கள் ஒருபோதும் அவரைப் பிரியப்படுத்த முடியாது.

**W.A. Holley**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 . | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**